بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ     نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ     وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 8

இதழ் 25

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்தூர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1444 - துல்ஹஜ் 03 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - இஹ்ஸான் 22 ★ 22 ஜீன் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِنْ تَتَّقُوا اللّٰهَ يَجْعَلْ لَّكُمْ فُرْقَانًا وَّيُكَفِّرْ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ وَيَغْفِرْ لَكُمْ ؕ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ﴿۳۰﴾

நம்பிக்கை கொண்ட மக்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சினால் அவன் உங்களுக்கு ஒரு தனித்தன்மையை ஏற்படுத்துவான். மேலும், உங்கள் பலவீனங்களை உங்களை விட்டு அகற்றிவிடுவான். மேலும், உங்களை மன்னிப்பான். மேலும், அல்லாஹ் பெரும் அருளுடையவனாவான்.
(அல்அன்ஃபால்:30)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இறந்தவர்களிடம் உதவி வேண்டுகின்ற வழிமுறையை நாம் மிகவும் வெறுக்கத் தக்கதாக பார்க்கின்றோம். இறந்தவர்களிடம் செல்லுவதற்கு அல்லாஹ் எங்கேயும் வழிகாட்டல் வழங்கவில்லை. மாறாக كُوْنُوْا مَعَ الصّٰدِقِيْنَ ﴿۱۱۹﴾ என்று கட்டளை வழங்கி உயிருள்ளவர்களின் தோழமையில் இருப்பதற்கான கட்டளை வழங்கியுள்ளான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### நல்லடியார்களின் தோழமை

விஷயம் என்னவென்றால், இறந்தவர்களிடம் உதவி வேண்டக்கூடிய வழிமுறையை நாம் மிகவும் வெறுக்கத் தக்கதாக பார்க்கின்றோம். இறந்தவர்களின் பக்கம் செல்வதும், உயிருள்ளவர்களிடமிருந்து வெறுண்டோடுவதும் பலவீனமான ஈமான் படைத்த மக்களின் பணியாகும். அல்லாஹ் கூறுகின்றான்: ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்களின் உயிரோடு இருக்கும்வரை மக்கள் அன்னாரின் நபித்துவத்தை நிராகரித்து வந்தனர். மேலும், அன்னார் மரணித்துவிட்ட நாளன்று, இன்று நபித்துவம் முடிந்து விட்டது என்று அவர்கள் கூறினர்.

இறந்தவர்களிடம் செல்லுவதற்கு அல்லாஹ் எங்கேயும் வழிகாட்டல் வழங்கவில்லை. மாறாக

كُوْنُوْا مَعَ الصّٰدِقِيْنَ ﴿۱۱۹﴾

(9:119) என்று கட்டளை வழங்கி உயிருள்ளவர்களின் தோழமையில் இருப்பதற்கான கட்டளை வழங்கியுள்ளான். இதன் காரணமாகவே நாம் எமது நண்பர்களை மீண்டும், மீண்டும் இங்கு (காதியான்) வருவதற்கும், தங்குவதற்கும் வலியுறுத்துகின்றோம். நாம் (எமது) ஒரு நண்பரை இங்கு தங்குவதற்காக கூறுகின்றோம் என்றால், நாம் அவர் மீது கருணை கொண்டு அனுதாபத்துடனும், அவரது நலனை விரும்பியவாறும் கூறுகின்றோம் என்பதை அல்லாஹ் நன்கு அறிந்திருக்கின்றான். நான் மெய்யாகவே கூறுகின்றேன். ஈமானுடைய நபரின் தோழமையில் மனிதன் இருக்காத வரை (அவருடைய) ஈமான் சீராக முடியாது. இது எதனால் என்றால், மனித இயல்புகள் பலதரப்பட்டவையாக இருக்கின்றன. ஒரேநேரத்தில் எல்லா வகையான இயல்பிற்கு ஏற்பவும் அறிவுரையாளரின் வாயிலிருந்து சொற்பொழிவு வெளிப்படுவதில்லை. (எனினும் தோழமையில் தங்கி இருக்கும்போது) ஒருநேரம்

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்

**இந்த வசனத்தில் இஸ்லாமிய அமைப்பிற்கான எப்படிப்பட்ட ஒரு கட்டளை எடுத்துரைக்கப்பட்டுள்ளதென்றால் அதில் இஸ்லாம் மற்ற மார்க்கத்திலிருந்து தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. அனாதைகளிடம் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கான கட்டளை எல்லா மார்க்கத்திலும் கிடைக்கின்றது. ஆனால், அவர்களின் செல்வங்களை பாதுகாக்க வேண்டும் மேலும் அதனை அதிகரிப்பதற்கு முயற்சி செய்யுங்கள் என்ற இந்தக் கட்டளை வேறு எந்த மார்க்கத்திலும் இல்லை**

وَلَا تَقْرَبُوْا مَالَ الْيَتِيْمِ اِلَّا بِالَّتِيْ هِيَ اَحْسَنُ حَتّٰى يَبْلُغَ اَشُدَّهٗ ۪ وَاَوْفُوْا بِالْعَهْدِ ۚ اِنَّ الْعَهْدَ كَانَ مَسْـُٔوْلًا ﴿۳۵﴾

என்ற வசனத்தின் விளக்கவுரையில் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ் கூறுகின்றான்: அனாதைகளின் செல்வத்திற்கு அருகிலேயே செல்லாதீர்கள். اِلَّا بِالَّتِيْ هِيَ அதாவது, மிகச் சிறந்த விளைவுகளை உருவாக்க வேண்டும் என்ற ஒரு வழிமுறையே ஒருவரின் செல்வத்தில் அதிகாரம் செலுத்துவதில் இருக்க வேண்டும். அதாவது, (அனாதைகளாகிய) அவர்களின் செல்வங்களை ஆகுமற்ற வழிகளில் பயன்படுத்தாதீர்கள். மாறாக, அவற்றை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால் அதனால் அவர்களது செல்வம் அதிகரிக்க வேண்டும். மேலும், அனாதைகளுக்கு பயனளிக்க வேண்டும். இந்த வசனத்தில், இஸ்லாமிய அமைப்பிற்கான எப்படிப்பட்ட ஒரு கட்டளை எடுத்துரைக்கப்பட்டுள்ளதென்றால் அதில் இஸ்லாம் மற்ற மார்க்கத்திலிருந்து தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. அனாதைகளிடம் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கான கட்டளை எல்லா மார்க்கத்திலும் கிடைக்கின்றது. ஆனால், அவர்களின் செல்வங்களை பாதுகாக்க வேண்டும். மேலும் அதனை அதிகரிப்பதற்கு முயற்சி செய்யுங்கள் என்ற இந்தக் கட்டளை வேறு எந்த மார்க்கத்திலும் இல்லை. ஆக,

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்

## நபிமொழி

### கீழேக் கிடக்கும் ஒரு பொருளைக் கண்டால்

( 2372) ஹஸ்ரத் ஸைது பின் காலித் ஜுஹ்னீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் ஒரு நபர் வந்தார். மேலும், அவர் கீழே கிடக்கும் பொருட்களைக் குறித்து கேட்டார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: அதனுடைய பை மற்றும் அதன் (சுருக்குக்) கயிற்றை அடையாளம் வைத்துக் கொள்ளுங்கள். பின்னர் ஒரு வருடம் வரை அதை அறிவித்து வாருங்கள். அதனுடைய உரிமையாளர் வந்துவிட்டால், நல்லது; இல்லையென்றால் நீங்கள் விரும்பியபடி பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

(பிறர்) தொலைத்த, வழிதவறிய ஆடு? (குறித்து ஹுஸுர் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் என்ன?) என்று அந்த நபர் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அது உங்களுக்கானது அல்லது உங்களது சகோதரர்களுக்கானது ஆகும் அல்லது ஒரு ஓநாய்க்குரியதாகும்.

வழிதவறிய ஒட்டகம்? என்று அந்த நபர் கேட்டார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: உமக்கு அதனுடன் என்ன தொடர்பு? அதனுடன் அதன் தண்ணீர் பையும் (குடலும்) உள்ளது. மேலும் அதன் கால்களும் (உள்ளன). அது தண்ணீர் குடித்துக் கொள்ளும். மேலும் மரங்களிலிருந்து (தழைகளை) உண்ணும். எந்த அளவிற்கு என்றால் அதனுடைய உரிமையாளர் அதனை அடைந்துவிடுவார்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் முஸாகாத், காதியான் பதிப்பு 2008 ஆம் ஆண்டு)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றங்களை வெளிப்படுத்தக்கூடிய ஈமானை வலுவூட்டக் கூடிய சில சம்பவங்களைப் பற்றிய குறிப்புகள்**

**நமது எதிரிகள் இரவு பகலாக முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். மேலும், கொலை செய்வதற்கு பல வகையான திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கின்றனர். மேலும், ஜமாஅத்தை தடை செய்வதற்காக முழுமையான அழுத்தம் கொடுக்கின்றனர். ஆனாலும், இறைவன் ஜமாஅத்தை முன்னேறச் செய்து கொண்டிருக்கின்றான் (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ்ஸலாம்)**

**கம்பீரமும், மகிமையும் பொருந்திய அல்லாஹ் எவரை அனுப்பியுள்ளானோ மேலும், எவர் உண்மையிலேயே இறைவன் புறமிருந்து வந்துள்ளாரோ அவர் அனுதினமும் முன்னேற்றம் அடைகின்றார். மேலும், வளர்கின்றார். மேலும் அவரது ஜமாஅத் நாளுக்கு நாள் மேன்மை அடைந்து கொண்டே செல்கின்றது. மேலும், அதனை தடுக்கக் கூடியவர் நாளுக்கு நாள் அழிவிற்கும், இழிவிற்கும் ஆளாகிக் கொண்டே செல்கின்றார். அவருடைய எதிரிகள் மற்றும் அதனை பொய்ப்படுத்துபவர்கள் இறுதியில் மிகவும் ஏக்கத்துடன் மடிகின்றனர்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தை நாங்கள் எங்களது வாய்பேச்சுகளால் அழித்து விடுவோம் என்று இந்த பெயர்தாங்கி ஆலிம்களும், எதிரிகளும் கருதுகின்றனர். ஆனால், அவர்கள் அல்லாஹ்வுடன் போட்டியிடுகின்றனர். மேலும், அல்லாஹ்விற்கு எதிரில் ஒருவர் எழுந்து நிற்கும்போது அவர் தன்னையே அழித்துக் கொள்கின்றார் என்பதை அறிவதில்லை.**

**பாகிஸ்தானிலும் ஒரு பக்கம் நமது பள்ளிவாசல்களின் மினாராக்களை இடிக்கப்படுகின்றன. மஸ்ஜித்களின் மஹ்ராப்கள் இடிக்கப்படுகின்றன. மற்றொரு பக்கம் அல்லாஹ் நமக்கு அழகிய பள்ளிவாசல்களை வழங்கிக் கொண்டிருக்கின்றான். மேலும் அதிகமாக வழங்கிக் கொண்டிருக்கின்றான்**

**மர்ஹூம் குலாம் காதிர் ஸாஹிப் அவர்களின் துணைவியார் பர்வீன் அக்தர் ஸாஹிபா, சவ்த்ரி வஸீம் அஹ்மத் நாஸிர் ஸாஹிப், ராவல்பிண்டியைச் சேர்ந்த பிரிகேடியர் முனவ்வர் அஹ்மத் ரானா ஸாஹிப், ராவல்பிண்டியின் முன்னாள் நாயிப் அமீர் ஜமாஅத் அப்துஷ் ஷுகூர் ஸாஹிப் ஆகியோரின் மரணத்தையொட்டி அவர்களைப் பற்றிய நற்குறிப்புகள் மற்றும் ஜனாஸா காயிப் தொழுகை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 மே 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **19ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்தின் மீதான அல்லாஹ்வின் அருள் மற்றும் அது அதிகரித்துக் கொண்டே வருவதைக் குறிப்பிட்டவாறு ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இந்த அளவிற்கு பொய்ப்படுத்துதல் மற்றும் நிராகரிப்பிற்கு மத்தியிலும், மேலும் இரவு, பகலாக முழுமூச்சாக செய்யப்படும் நமது எதிரிகளின் முயற்சிகளுக்கு மத்தியிலும் இந்த ஜமாஅத் முன்னேற்றமடைந்து வருகின்றது. இதுவும் கம்பீரமும், மகிமையும் பொருந்திய அல்லாஹ்வின் பெரும் அற்புதமாகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நமது எதிரிகள் இரவு பகலாக முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். மேலும், கொலை செய்வதற்கு பல வகையான திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கின்றனர். மேலும், ஜமாஅத்தை தடை செய்வதற்காக முழுமையான அழுத்தம் கொடுக்கின்றனர். ஆனாலும், இறைவன் ஜமாஅத்தை முன்னேறச் செய்து கொண்டிருக்கின்றான்.

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்: இதில் என்ன ஞானம் உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா? இதிலுள்ள நுட்பமான ஞானம் என்னவென்றால், கம்பீரமும், மகிமையும் பொருந்திய அல்லாஹ் எவரை அனுப்பியுள்ளானோ மேலும், எவர் உண்மையிலேயே இறைவன் புறமிருந்து வந்துள்ளாரோ அவர் அனுதினமும் முன்னேற்றம் அடைகின்றார். மேலும், வளர்கின்றார். மேலும் அவரது ஜமாஅத் நாளுக்கு நாள் மேன்மை அடைந்து கொண்டே செல்கின்றது. மேலும், அதனை தடுக்கக் கூடியவர் நாளுக்கு நாள் அழிவிற்கும், இழிவிற்கும் ஆளாகிக் கொண்டே செல்கின்றார். அவருடைய எதிரிகள் மற்றும் அதனை பொய்ப்படுத்துபவர்கள் இறுதியில் மிகவும் ஏக்கத்துடன் மடிகின்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

ஒருவர் எவ்வளவு வேண்டுமானாலும் முயற்சி செய்து கொள்ளட்டும்! மேலும் ஆயிரக்கணக்கான திட்டங்களை தீட்டிக் கொள்ளட்டும்! அவரால் இறைவனின் எண்ணத்தையும் (தடுக்க முடியாது), மேலும் எவர் உண்மையிலேயே அவன் புறமிருந்து வந்துள்ளாரோ அவரை (யும்) எவராலும் தடுக்க முடிக்க முடியாது. ஏனெனில், இந்த முயற்சிகளால் அந்த ஜமாஅத் தடைபட்டுவிட்டால் பின்னர், தடுக்கக் கூடியவர் இறைவனை வெற்றிக் கொண்டுவிட்டார் (நவூதுபில்லாஹ்) என்று ஒப்புக் கொள்ள நேரிடும். ஆனால், எவராலும் இறைவனை வெற்றிக் கொள்ள முடியாது. (மல்ஃபூஸாத், தொகுதி 10, பக்கம் 24, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

ஆக, இந்த விஷயங்கள் முழுமையடைந்ததற்கான காட்சிகளை நாம் அனுதினமும் பார்க்கின்றோம். எதிரி தனிப்பட்ட ரீதியிலும் முயற்சி செய்தான். அணிதிரண்டு ஒன்றாக நின்று ஜமாஅத்திற்கு எதிராக சதித் திட்டங்களை தீட்டுவதற்கும் முயற்சி செய்தான். ஆனால், நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்று அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் வாக்குறுதி செய்திருந்தான். (தத்திகரா: பக்கம் 260, பதிப்பு-நான்கு)

பின்னர் கூறினான்: நான் உமது தூய மற்றும் இதயப்பூர்வமான அன்பர்களை அதிகரித்து விடுவேன். (ஆய்னா கமாலாத்தே இஸ்லாம், ரூஹானி கஸாயீன், தொகுதி 5, பக்கம் 648) இவற்றிற்கேற்ப, உலகில் ஜமாஅத் பரவி வருவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தை நாங்கள் எங்களது வாய்பேச்சுகளால் அழித்து விடுவோம் என்று இந்த பெயர்தாங்கி ஆலிம்களும், எதிரிகளும் கருதுகின்றனர். ஆனால், அவர்கள் அல்லாஹ்வுடன் போட்டியிடுகின்றனர். மேலும், அல்லாஹ்விற்கு எதிரில் ஒருவர் எழுந்து நிற்கும்போது அவர் தன்னையே அழித்துக் கொள்கின்றார் என்பதை அறிவதில்லை; மேலும், அல்லாஹ் தனது அடியாருக்கு உதவியும், ஆதரவும் வழங்குகின்றான் என்பதையும் அவர்கள் அறிவதில்லை.

அல்லாஹ்வின் ஆதரவு, உதவிக்கான காட்சிகளை நாம் உலகின் தொலைதூர நாடுகளிலும் பார்க்கின்றோம். பொதுவாக சில பகுதிகள் இருக்கின்றன. அங்கு சில முறை மனிதன் சென்றடைய முடியாது. மேலும், மிக அரிதாகவே (அங்கு செல்வதற்கு) பாதைகள் இருக்கின்றன. ஆனால், அப்படிப்பட்ட பகுதிகளிலும் அல்லாஹ் தனது உதவிக்கான காட்சிகளை காட்டிக் கொண்டிருக்கின்றான். எதிரிகள் தங்களது முழுமையான முயற்சிகளை செய்கின்றனர். எனினும், தோல்வியையே சந்திக்கின்றனர். சில இடங்களில் உயிருக்கும், செல்வத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தி ஜமாஅத் உறுப்பினர்களை அச்சமடையச் செய்ய விரும்புகின்றனர். ஆனால், இந்த விஷயங்கள் ஜமாஅத் உறுப்பினர்களின் ஈமானில் வலு சேர்க்கின்றன.

உலகில் (நமக்கு ஆதரவான) அல்லாஹ்வின் உதவிக்கான சம்பவங்கள் இருக்கின்றன. மேலும், ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அல்லாஹ் செய்துள்ள வாக்குறுதிகள் உள்ளன. அவை எவ்வாறு முழுமையடைகின்றன? என்பதை முழுமையாக எடுத்துரைப்பது சாத்தியமற்ற விஷயம் ஆகும். ஆனால், தற்போது நான் ஜமாஅத்தின் முன்னேற்றங்களுக்கான சில சம்பவங்களை எடுத்துரைப்பேன். நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வர வேண்டும் என்றும், அன்னாரை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் அல்லாஹ் மக்களின் உள்ளங்களில் எவ்வாறு எண்ணங்களை ஏற்படுத்துகின்றான்? என்பதைப் பார்ப்போம்.

சில இடங்களில் மக்கள் எதிர்க்கின்றனர். ஆனால், குறைவான அறிவின் காரணமாக அந்த எதிர்ப்பு அமைகின்றது. அவர்களுக்கு உண்மை தெரிந்துவிடும்போது பின்னர் அவர்கள் எதிர்ப்பை மட்டும் கைவிடுவதில்லை. மாறாக, ஒப்புக் கொண்டும் விடுகின்றனர். ஆக, அதைப் போன்ற சம்பவத்தை குறிப்பிட்டவாறு கான்கோ கன்ஷாஸாவின் அமீர் ஜமாஅத் அவர்கள் எழுதியுள்ளார்கள்:

கான்கோ சென்ட்ரல் மாநிலத்தில் உள்ள ஒரு கிராமத்தின் ஒரு பகுதியில் நமது முஅல்லிம் ஈஸா ஸாஹிப் அவர்கள் இருக்கின்றார்கள். அன்னார் ஜமாஅத்தின் குழுவுடன் தப்லீக்கிற்காக சென்றிருந்தார்கள். அங்குள்ள மஸ்ஜித் இமாம் ஜிப்ரீல் ஸாஹிப் என்பவர் ஜமாஅத்தை எதிர்ப்பதன் அடிப்படையில் மிகவும் பிரபல்யமானவராக இருந்தார். அவருடன் ஈஸா (அலை) மரணம், மஸீஹ் மற்றும் மஹ்தியின் வருகை தொடர்பாக கலந்துரையாடல் நடந்தது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்ற கொள்கையால் நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இழுக்கு சேர்கின்றது என்ற விஷயம் தெளிவாகிவிட்டபோது அவர் இந்த விஷயத்தை புரிந்து கொண்டார். அவரிடத்தில் பாகிஸ்தானிய மவ்லவிகளைப் போன்று அகம்பாவம் இருக்கவில்லை. இமாம் மஹ்தியின் தோற்றம் தொடர்பான கொள்கையும் அவருக்கு புரிந்துவிட்டது. அவர், அப்பொழுதே தனது குடும்பத்தைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்களுடனும், தனது 21 தொண்டர்களுடனும் பைஅத் செய்துவிட்டார். இவ்வாறு இங்கு ஜமாஅத்தும் நிறுவப்பட்டுவிட்டது.

அடுத்து, சில இடங்களில் அல்லாஹ் சுயமே (அஹ்மதிய்யத்தை) ஒப்புக் கொள்வதற்கு பூமியை ஆயத்தம் செய்கின்றான். அந்த வகையில், கினிகனாகிரியின் முபல்லிக் எழுதுகின்றார்:

இங்கு கோட்டோயா என்ற ஒரு கிராமம் உள்ளது. அங்கு தப்லீக் செய்யும் நோக்கத்துடன் சென்றடைந்தோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை விளக்கத்துடன் எட்டவைத்தோம். அப்போது, கிராமத்தின் அனைவரையும் விட பெரியவர் ஒருவர் இவ்வாறு கூறினார்:

நான் எங்களது மூதாதையர்களிடமிருந்து மஹ்தி, மஹ்தி என்ற சொல்லை அதிகமாக செவிமடுத்து வந்தேன். ஆயினும், ஒருபோதும் அந்த விஷயம் எனக்கும் புரியவில்லை ; மூதாதையர்களும் அதன் விளக்கத்தை ஒருபோதும் கூறவுமில்லை. எனினும், இஸ்லாத்துடன் அவருக்கு தொடர்பு உள்ளது என்று (மூதாதையர்கள்) கூறியிருந்தார்கள். எனவேதான் இன்று நீங்கள் மஹ்தியைக் குறித்து விரிவாக குறிப்பிட்டபோது, நான் உண்மையான உள்ளத்துடன் அஹ்மதிய்யத்தில் நுழைகின்றேன்.

பின்னர் அந்த நபர், கிராமவாசிகளை நோக்கி இவ்வாறு கூறினார்:

இந்த ஜமாஅத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில், நான் அதிகமான ஆஃப்ரிக்க நாடுகளில் பயணம் செய்துள்ளேன். மேலும், எல்லா இடங்களிலும் அஹ்மதியா முஸ்லிம் ஜமாஅத் மட்டுமே இஸ்லாத்திற்கு தொண்டாற்றி வருவதை என்னால் காண முடிந்தது. ஆனால், மற்ற பிரிவினரோ ஒன்று உலகத்தை சம்பாதிப்பதில் ஈடுபட்டுள்ளனர் அல்லது ஒருவர் மற்றவரை காஃபிர் ஆக்குவதில் தங்களது அறிவார்ந்த முயற்சிகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த ஒரே ஜமாஅத்துதான் திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்திற்கு தொண்டாற்றிக் கொண்டு வருகின்றது.

அல்லாஹ்வின் அருளால் கிராமத்தின் இமாம் உட்பட ஏராளமான மக்கள் பைஅத் செய்துவிட்டனர். ஒரு மிகப் பெரிய ஜமாஅத் அங்கு நிறுவப்பட்டுவிட்டது.

அடுத்து, கேம்பியாவின் முபல்லிக் இன்சார்ஜ் கூறுகின்றார்கள்.

அவர்களுடைய நயா மீனா என்ற ஒரு மாவட்டம் உள்ளது. அங்கு ஒரு கிராமம் உள்ளது.

அன்னார் கூறுகின்றார்கள்: நமது தப்லீக் குழு அங்கு சென்றது. அவர்கள் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தார்கள். இமாம் மஹ்தி (அலை) அவர்களுடைய உண்மையான மற்றும் அழகிய போதனைகளை எடுத்துக் கூறினர். பைஅத்தின் பத்து நிபந்தனைகளையும் வாசித்துக் காட்டினார்கள். அவர்கள் கிராமப்புற வாசிகளாக இருந்தனர். ஆனால், அறிவும், புரிதலும் படைத்திருந்தனர். மேலும், இது உண்மையான இஸ்லாத்தின் விஷயங்கள் அல்லவா? இதைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் முன்னறிவிப்பு செய்துள்ளார்களே என்று பைஅத்தின் பத்து நிபந்தனைகளைக் செவிமடுத்து விட்டு ஆச்சரியமடைந்துவிட்டனர். மேலும் அந்த கிராமவாசிகள் இவ்வாறு கூறினர்:

நாங்கள் இஸ்லாத்தின் இவ்வளவு அழகிய போதனையை மற்றும் அற்புதமான போதனையை செவிமடுப்பது இதுவே முதல் முறை ஆகும். எங்களது பெயர்தாங்கி ஆலிம்களிடமிருந்து இதுபோன்ற அழகிய தூதுச் செய்திகளை எவருமே செவிமடுக்க முடியாது.

மேலும், இறுதியில் அவர்கள் கூறினர்:

அஹ்மதிய்யத்துதான் உண்மையான இஸ்லாம் ஆகும்; மேலும், நாங்கள் ஜமாஅத்தில் இணைகின்றோம்.

மனித குலத்தை அல்லாஹ்வின் கோபத்திலிருந்து பாதுகாக்கக் கூடியது இந்த அஹ்மதிய்யத் மட்டுமே ஆகும் என்ற முடிவிற்கு அவர்கள் வந்துவிட்டனர். அல்லாஹ்வின் அருளினால், ஒரு நீண்ட நெடிய தப்லீக் கேள்வி பதில் அமர்விற்குப் பிறகு அனைத்து மக்களும், அவர்களின் எண்ணிக்கை சுமார் இருநூறு இருக்கும்; பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்துவிட்டனர்.

அடுத்து, ஆஃப்ரிக்காவின் ஒரு நாட்டைச் சேர்ந்த நமது ஒரு முபல்லிக் இருக்கின்றார். அவர் எழுதுகின்றார்.

தப்லீக் மைதானத்தில் சிலமுறை வெளிப்படையில், (சில சம்பவங்கள்) சாதாரண நிகழ்வுகளாக இருக்கின்றன. ஆனால், உண்மையில் அதன் பின்னணியில் இறைவனின் ஆதரவும், உதவியும் செயல்பட்டு கொண்டிருக்கின்றது.

அவர் கூறுகின்றார்: கவுண்டியின் ஒரு முக்கிய நகரத்தில் அதாவது மாவட்டத்தின் தலைநகரமான பாமா என்ற இடத்தில் தப்லீக் செய்வதற்கு நமது தப்லீக் குழு ஏற்பாடு செய்து கொண்டிருந்தது. அப்போது நாங்கள் மஸ்ஜிதில் அமர்ந்துதான் இருந்தோம். அதற்குள், அதே நகரத்தைச் சேர்ந்த நான்கு நபர்களை உள்ளடக்கிய ஒரு குழுவினர் எங்களை சந்திக்க வந்தனர். அவர்களில் ஒரு பெண்மணியும் இடம்பெற்றிருந்தார். அந்தப் பெண்மணி நகரத்தின் மகளிர் குழுவின் தலைவியாக இருந்தார். அந்தக் குழுவின் ஓர் உறுப்பினர் இவ்வாறு கூறினார்:

நாங்கள் உங்களுக்கு அழைப்பு கொடுப்பதற்காக வந்துள்ளோம்; நீங்கள் எங்களது பகுதிக்கு வாருங்கள். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தியை எட்ட வையுங்கள். ஏனெனில், உங்களது ஜமாஅத் தப்லீக் செய்கின்றது என்றும், குறிப்பாக குழந்தைகளுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கின்றது என்றும் எங்களுக்குத் தெரிய வந்துள்ளது.

எனவே நாங்கள் அடுத்த நாளே அங்கு செல்வதற்கான நிகழ்ச்சியை உருவாக்கினோம். அங்கு சென்றடைந்து ஜமாஅத்தின் அறிமுகத்தை செய்து வைத்தோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை மற்றும் நோக்கம் ஆகியவற்றை எடுத்துரைத்தோம். அதன் பிறகு, கேள்வி பதில் நிகழ்ச்சியின் ஒரு நீண்ட தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் முடிவில், நாங்கள் இன்று (அஹ்மதியா) ஜமாத்தில் இணைகின்றோம் என்று கிராமவாசிகள் அனைவரும் முடிவெடுத்தனர். இவ்வாறு இங்கும் புதிய ஜமாஅத் உருவாகிவிட்டது.

அதன் பிறகு, இன்றிலிருந்து இவர்கள் ஜமாஅத்தின் பிள்ளைகள்; இவர்களுக்கு எவ்வாறு திருக்குர்ஆன் கற்பிப்பது என்று நீங்கள் எங்களுக்கு கூறுங்கள்? என அந்தப் பகுதியில் இருந்த அனைத்து பிள்ளைகளையும் ஒன்றுகூட்டி எங்களுக்கு முன்னால் அவர்கள் நிறுத்தி விட்டார்கள்.

ஆக, முரப்பி ஸாஹிப் கூறுகின்றார்: அவர்களில் இரண்டு இளைஞர்களை திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதற்காக நான் தேர்ந்தெடுத்தேன். அவர்களுக்கு முதலில் கற்றுக் கொடுக்கப்படும்; பின்னர் அவர்கள் திரும்பிச் சென்று தமது பள்ளிவாசலில் தமது பகுதிகளில் திருக்குர்ஆன் வகுப்புகளை நடத்தி எஞ்சிய பிள்ளைகளுக்கு அவர்கள் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தேன்.

கூறுகின்றார்: நாங்கள் தற்போது ஓர் எண்ணம் மட்டுமே கொண்டிருந்தோம்.

அந்தநேரமே அல்லாஹ் எங்களுக்கு தனது உதவியையும், ஆதரவையும் வழங்கிவிட்டான்.

பாகிஸ்தானில் திருக்குர்ஆன் ஓதுவதற்கல்ல; திருக்குர்ஆன் கேட்பதற்கே நமக்கு தடை உள்ளது. ஓர் அஹ்மதி திருக்குர்ஆன் திலாவத்தை எப்படி செவிமடுக்கலாம்? என்று அவர் மீது வழக்கு தொடரப்பட்டுவிட்டது. இது அந்த பெயர் தாங்கி முஸ்லிம்களின் இஸ்லாம் ஆகும். மற்றொரு பக்கம் மக்கள் தங்களது பிள்ளைகளை, அவர்களுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காக ஜமாஅத்திடம் ஒப்படைக்கின்றார்கள். ஏனெனில், (நமது) ஜமாஅத் மட்டுமே திருக்குர்ஆனின் சரியான ஞானத்தைப் பெற்றிருக்கின்றது.

சில மக்கள் அஹ்மதி ஆன பிறகு, ஏதாவது பேராசைக்கு ஆளாகிவிடுகின்றனர் அல்லது அச்சத்தின் காரணமாக அஹ்மதிய்யத்தை விட்டுவிடுகின்றனர். இனி இங்கு ஜமாஅத்தை முடித்துவிடுவோம் என்று பின்னர் இவர்கள் கருதுகின்றனர். ஆனால், அல்லாஹ் அவர்களின் சிந்தனையை அவர்களுக்கு எதிராகவே ஆக்கிவிடுகின்றான். மேலும், இறைவனது வாக்குறுதிக்கேற்ப ஜமாஅத் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்கின்றது.

ஐவரிகோஸ்ட் முபல்லிக் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: ஓமே மண்டலத்தில் க்ரீஸுகியே (Krezoukoue) என்ற ஓரிடம் உள்ளது. அங்கு பெரும்பாலார் 2008 ஆம் ஆண்டில் ஜமாஅத்தில் இணைந்திருந்தனர். ஒரு சிறிய மஸ்ஜித் இருந்தது. அது அந்நேரத்தில் அங்கு கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. மக்கள் தாங்களாகவே கட்டிக் கொண்டிருந்தனர். அதனை ஜமாஅத்திடம் மக்கள் கொடுத்துவிட்டனர். பின்னர் ஜமாஅத் அந்த மஸ்ஜிதை முழுமையாக கட்டி முடித்தது. ஆனால், சில காலத்திற்குப் பிறகு முதலில் பைஅத் செய்து இணைந்திருந்த அங்குள்ள உள்ளூர் இமாமின் மூளையில் சீர்கேடு வந்தது. அவர் ஜமாஅத்திலிருந்து தனியாக பிரிந்து சென்றுவிட்டார். மேலும், பள்ளிவாசலையும் அபகரித்துக் கொண்டார். ஜமாத்துடனான தொடர்பை துண்டித்துக் கொள்ளுங்கள் என்று அவர் மக்களையும் தூண்டிவிட்டார். ஆனால், மக்கள் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் நிலைத்திருந்தனர். எவ்வாறு இருப்பினும், அந்த மவ்லவி மஸ்ஜிதை அபகரித்துக் கொண்டபோது, பின்னர் மக்கள் தற்காலிகமாக பிளாஸ்டிக் ஷீட்டுகளாலும், சிறிது மரக்கட்டைகளை ஒன்றுகூட்டியும் தற்காலிக மஸ்ஜிதைப் போன்ற ஒரு ஷெட்டை கட்டிக் கொண்டார்கள். மேலும், அங்கு தொழுகை நடத்தவும் தொடங்கிவிட்டார்கள். ஜுமுஆ தொழுகையைத் தொடங்கினார்கள். அதன் பின்னர், ஓர் உறுதியான பள்ளிவாசலை விட்டுவிட்டோமே என்ற விஷயத்தை எவருமே பொருட்படுத்தவில்லை. எவ்வாறு இருப்பினும், அல்லாஹ் அருள் செய்தான். மேலும் கூறுகின்றார்கள்: அந்த ஆண்டிலேயே அங்கு இரண்டு அடுக்கு அழகிய பள்ளிவாசலை கட்டுவதற்கு ஜமாஅத்திற்கு நற்பேறு கிடைத்தது. அதில் குவிமாடமும் உள்ளது. மேலும் மினாராக்களும் உள்ளன. மேலும், எந்த பள்ளிவாசலை அஹ்மதி அல்லாத இமாம் அபகரித்திருந்தாரோ அதை விட பல மடங்கு பெரிய மற்றும் அழகிய பள்ளிவாசலை அந்தப் பகுதியில் ஜமாஅத் கட்டிவிட்டது.

பாகிஸ்தானில் ஒரு பக்கமோ நமது மினாராக்கள் இடிக்கப்பட்டு வருகின்றன. பள்ளிவாசல்களில் உள்ள மெஹ்ராப்கள் இடிக்கப்பட்டு வருகின்றன. மற்றொரு பக்கம், அல்லாஹ் அழகிய பள்ளிவாசல்களை நமக்கு மற்ற இடங்களில் வழங்கிக் கொண்டிருக்கின்றான். மேலும் அதிகமாக வழங்கிக் கொண்டிருக்கின்றான்.

அல்லாஹ் எதிரிகளின் முயற்சிகளுக்கு எதிரில் எவ்வாறு நமக்கு உதவி செய்கின்றான்? என்பது தொடர்பாக ஆஃப்ரிக்காவின் ஒரு நாடான சாட் நாட்டில் உள்ள முபல்லிக் எழுதுகின்றார்:

2022 மார்ச்-ல் ஜமாஅத்தின் முதல் பள்ளிவாசல் திறக்கப்பட்டது.

கடந்த ஆண்டு நடந்த விஷயத்தை கூறிக் கொண்டிருக்கின்றேன். இந்த ஆண்டின் அறிக்கை இன்ஷாஅல்லாஹ் இனி வரும்.

முபல்லிக் ஸாஹிப் கூறுகின்றார்: சாட் நாட்டின் தலைநகரத்தில் நமது பள்ளிவாசல் திறக்கப்பட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத் நமது நாட்டில் ஒரு புதிய மார்க்கத்தை கொண்டு வந்துள்ளது என்று பொறாமைக்காரர்கள் சதித் திட்டங்களைத் தீட்டி வருகின்றனர். பள்ளிவாசல் திறக்கப்பட்ட பிறகு, ஜமாஅத் சற்று பிரபல்யம் அடைந்துவிட்டதால், பொறாமைக்காரர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியது. மேலும் அவர்களின் நடவடிக்கைகளும் வேகமெடுக்கத் தொடங்கின.

முரப்பி ஸாஹிப் கூறுகின்றார்: எங்களது பகுதியின் சில ஆலிம்கள், பெயர் தாங்கி மவ்லவிகள் பள்ளிவாசல்களில் ஜமாஅத்திற்கு எதிராக சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றனர். மேலும், அஹ்மதிகளின் பள்ளிவாசலை பூட்டிவிட வேண்டும் என்று பிரச்சாரம் செய்து கொண்டிருக்கின்றனர். மேலும், இது தொடர்பாக அவர்கள் மக்களை ஒன்று திரட்டினர். மேலும், சாட் இஸ்லாமிக் கவுன்சிலுக்கும் சென்றார்கள். மேலும், நீங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு பள்ளிவாசல் கட்டுவதற்கு ஏன் அனுமதி வழங்கினீர்கள்? மேலும், ஜுமுஆவிற்காக மஸ்ஜித் ஏன் திறக்கப்பட்டது? என்று அவர்களிடம் கேள்வி எழுப்பினர். மேலும், இந்த மஸ்ஜித் உடனடியாக பூட்டப்பட வேண்டும்; இதனால், எங்கள் பகுதியில் குழப்பம் உருவாகிக் கொண்டிருக்கின்றது என்றும் அவர்கள் கூறினர். இறை வணக்கம் செய்வதற்கு அவர்களுக்கு, அஹ்மதிகளுக்கு உரிமை உள்ளது. அல்லாஹ்வின் இல்லமாகிய பள்ளிவாசலை நாங்கள் எப்படி பூட்ட முடியும்? ஒருவேளை குழப்பம் உருவாகுதற்கான அச்சம் உங்களுக்கு இருக்குமென்றால் நீங்கள் சென்று காவல்துறையிடம் ரிப்போர்ட் செய்யுங்கள் என்று இஸ்லாமிக் கவுன்சில் மக்கள் கூறிவிட்டனர்.

அங்குள்ள இஸ்லாமிக் கவுன்சிலுக்கு குறைந்தபட்சம் இந்த அளவு அறிவு இருக்கின்றது! மேலும் அவர்கள் நீதியை விரும்பக் கூடியவர்களாகவும் உள்ளனர். அதாவது, அவர்கள் யாருக்கும் அஞ்சவில்லை.

(ஆனால்) பாகிஸ்தானில் நீதிபதிகள் கூட மக்களின் மீதான அச்சத்தால் நமக்கு எதிராக தீர்ப்பு வழங்கிவிடுகின்றனர். மேலும், அங்கு மஸ்ஜித் என்று அழைக்கப்படுவது ஒருபக்கம்; மஸ்ஜிதில் தொழுவதற்கும், இறை வணக்கம் செய்வதற்கும் அனுமதி கிடையாது.

எவ்வாறு இருப்பினும், அதன் பிறகு அந்த மக்கள் காவல்துறையின் தலைமை அலுவலகத்திற்கு சென்றுவிட்டனர். மேலும், எங்கள் பகுதிகளில் குழப்பம் உருவாகி வருகிறது; அஹ்மதிகளை தடை செய்ய வேண்டும். அவர்கள் புதிய மார்க்கத்தை கொண்டு வந்துள்ளனர்; மேலும் நவூதுபில்லாஹ், அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் ஒப்புக் கொள்வதில்லை என்று புகார் அளித்தனர். காவல்துறை அதிகாரி முபல்லிக்கை அழைத்தார். ஜமாஅத்தின் ரிஜிஸ்ட்ரேஷன் காபி மற்றும் பள்ளிவாசல் கட்டுவதற்காக பெறப்பட்ட அனுமதி கடிதம் போன்றவற்றை கொடுக்கும்படி கூறினார். அனைத்து விஷயங்களும், அனைத்து காகிதங்களும் கொடுக்கப்பட்டன. எவ்வாறு இருப்பினும், நீங்கள் செல்லுங்கள். நான் விசாரித்துவிட்டு கூறுவேன் என்று அவர் கூறினார்.

அதன் பிறகு, அந்த காவல்துறை அதிகாரி முஹல்லாவின் தலைவரை அழைத்தார். மேலும், உங்களது முஹல்லாவில் அஹ்மதிகள் பள்ளிவாசல் கட்டியுள்ளனரா? என்று அவரிடம் கேட்டார். மேலும், அவர்கள் புதிய மார்க்கத்தை கொண்டு வந்துள்ளனரா? மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை, அஹ்மதிகள் ஒப்புக் கொள்வது இல்லையா? என்றும் கேட்டார். அதற்கு அவர் இவ்வாறு கூறினார்:

அப்படி எந்த விஷயமும் இல்லையே! நான் சுயமே அவர்களின் பள்ளிவாசலில் தான் ஜுமுஆ தொழுதேன். மேலும், அவர்கள் முஸ்லிம்களைப் போன்றே தொழுகின்றனர். மேலும், நான் மூன்று ஆண்டுகளாக அஹ்மதிய்யா ஜமாத்தைப் பற்றி அறிவேன். படைப்பினச் சேவையில் அவர்கள் பெரும் பணியாற்றி வருகின்றனர்.

எவ்வாறு இருப்பினும், போலீஸ் அதிகாரி ஒருநாள் நமது பள்ளிவாசலுக்கும் வந்துவிட்டார். மேலும், மஸ்ஜிதிற்கு வெளியே

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

என்று எழுதப்பட்டு இருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்து விட்டார். மேலும், நீங்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை ஒப்புக் கொள்ளத் தானே செய்கின்றீர்கள்? என்று கேட்டார். மேலும், பள்ளிவாசலின் ஹாலின் உட்பகுதியில் இருந்த திருக்குர்ஆன் வசனங்களைப் பார்த்து மேலும் ஆச்சரியம் அடைந்துவிட்டார். பின்னர், அவர் கூறினார்: உங்களின் கிப்லாவும் ஒன்றாக உள்ளது. மேலும் பள்ளிவாசலில் மற்ற முஸ்லிம்களின் பள்ளிவாசல்களில் இருப்பது போன்றே தொழுகையில் நீங்கள் வரிசையாக நிற்கின்றீர்கள். இவர்கள் புதிய மார்க்கத்தை கொண்டு வந்துள்ளனர் என்றல்லவா என்னிடம் கூறப்பட்டிருந்தது!

எவ்வாறு இருப்பினும், காவல்துறையும் (நமக்கு எதிராக) எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அக்கம்பக்கத்தில் இருந்த அஹ்மதி அல்லாதவர்களின் வீட்டிலும் விசாரித்தனர். இவர்களால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்று அவர்களும் கூறினர்.

பின்னர் எதிரிகள் காவல்துறையிடம்

தோற்ற பிறகு, வீடுகளுக்கு செல்லத் தொடங்கி விட்டனர். இவர்களை இங்கிருந்து வெளியேற்றுவதற்காக கூச்சலிடுங்கள் என்று அவர்களிடம் கூறினர். அதற்கு, மஸ்ஜித் அல்லாஹ்வின் இல்லம் ஆகும்; மேலும் இஸ்லாத்திலிருந்து விலகிய எந்தவொரு விஷயமும் எங்களுக்கு இவர்களிடம் தென்படவில்லை என்று அவர்களும் இதே பதிலை வழங்கினர். ஆக, எவ்வாறு இருப்பினும் (எதிரிகளாகிய) அவர்களுக்கு எல்லா ரீதியிலும் தோல்வியையே சந்திக்க நேரிட்டது.

ஜமாஅத்தில் இணைவதற்கு அல்லாஹ் மக்களின் உள்ளங்களில் எண்ணத்தை ஏற்படுத்துகின்றான்? இது தொடர்பாக ஒரு சம்பவத்தை பேலீஸ் நாட்டின் முபல்லிக் எடுத்துரைக்கின்றார்:

பேலீஸ் என்பது மத்திய அமெரிக்காவின் ஒரு நாடாகும்.

முபல்லிக் கூறுகின்றார்: மெத்தோடிஸ்ட் (Methodist) தேவாலயத்துடன் வலுவான தொடர்பு வைத்திருந்த ஒரு பெண்மணி மஸ்ஜித் நூர் என்ற பள்ளிவாசலைப் பார்த்தபோது, நான் இந்த மார்க்கத்தை ஒப்புக் கொண்டு விட வேண்டும் என்ற எண்ணத்தை இறைவன் அவரது உள்ளத்தில் ஏற்படுத்தினான். மஸ்ஜிதின் கட்டுமானம் முழுமையடைந்து பள்ளிவாசல் திறக்கப்பட்டபோது, அவர் தமது நண்பர்களிடம் கூறினார்: நான் அங்கு செல்ல வேண்டும்; மேலும், அந்த ஜமாஅத்தின் அங்கமாகிவிட வேண்டும் என்ற எண்ணத்தை இறைவன் எனது உள்ளத்தில் எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளான்.

அதற்கு, உனது வீட்டிற்கு அருகில் முஸ்லிம்களின் மற்றொரு பள்ளிவாசல் உள்ளது; நீ முஸ்லிமாக ஆக வேண்டுமென்றால் நீ அங்கு கூட செல்ல முடியும் என்று அவரது நண்பர்கள் கூறினர். அதற்கு, இல்லை! இவர்கள் சரியான மக்கள். நான் இவர்களுடன் இணைந்து கொள்ள வேண்டும் என்று அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பாகவே இறைவன் எனது உள்ளத்தில் ஏற்படுத்தியுள்ளான் என்று அந்தப் பெண்மணி கூறினார்.

ஆக, அந்தப் பெண்மணி மஸ்ஜித் நூர் பள்ளிவாசலுக்கு வருகை தந்தபோது, மேலும், அவருக்கு ஜமாத்தைப் பற்றி அறிமுகம் செய்து வைக்கப்பட்டபோது, தன்னை இறைவன் எவ்வாறு இந்த ஜமாத்தில் கொண்டு வந்துள்ளான்! என்று எண்ணி அவர் மிகவும் உணர்ச்சிவயப்பட்டுவிட்டார்.

நான் பூமியின் எல்லைகள் வரை உமது தூதுச் செய்தியை எட்ட வைப்பேன் என்ற இல்ஹாமை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அருளியிருந்தான் என்று முரப்பி ஸாஹிப் அவரிடம் கூறினார்.

ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாத்திற்காக அல்லாஹ் இதுபோன்ற பணி செய்கின்றான். எனவே மஸ்ஜிதிற்கு வந்த பிறகும், இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் போதனையைக் குறித்து அறிந்த பிறகும் அன்னார் சில நாட்களில் பைஅத் செய்துவிட்டார்கள். மேலும், ஜமாத்தில் இணைந்துவிட்டார்கள்.

சிலமுறை சில மக்கள் தவறான புரிதலின் காரணமாக அல்லது மக்களின் பேச்சுகளை கேட்டுவிட்டு எதிர்க்கின்றனர். ஆனால் அவர்கள் நல்இயல்பு படைத்த மக்களாகவே இருக்கின்றனர். அத்தகைய மக்களுக்கு அல்லாஹ் எவ்வாறு வழிகாட்டுகின்றான்? இது தொடர்பாக ஒரு சம்பவத்தை கேம்பியாவின் முபல்லிக் இன்சார்ஜ் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: ஜமாரா மாவட்டம், இது ஒரு பகுதியாகும். அங்கு கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு புதிய பள்ளிவாசலின் கதவுகள் மற்றும் ஜன்னல்களுக்காக கண்ணாடி வாங்கிக் கொண்டிருந்தேன். அப்போது, கண்ணாடியை வெட்டக்கக்கூடியவரும், அந்த வேலையில் வல்லுநருமாக இருந்த அபூபக்ர் ஸாலி என்ற ஒரு நபர் இருந்தார். அவரிடம், மஸ்ஜிதிற்காக கண்ணாடிகள் வாங்கப்பட்டுள்ளன என்று அவரிடம் கூறப்பட்டது. அப்போது அவர் தனது கூலியை குறைத்துவிட்டார். இது பள்ளிவாசலுக்கான பணியாகும். எனவே நான் குறைவான கூலியே பெறுவேன் என்று அவர் கூறினார்.

ஆக, முபல்லிக் ஸாஹிப் கூறுகின்றார்: கண்ணாடியை வாங்கிக் கொண்டு, எந்த நபர் கண்ணாடியை அங்கு பொருத்த இருந்தாரோ அவருடன் நாங்கள் அங்கு சென்றடைந்தோம். இந்த அளவிற்கு தொலைதூரப் பகுதியில் அழகிய பள்ளிவாசலைப் பார்த்துவிட்டு அந்த நபருக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால், இது அஹ்மதி முஸ்லிம்களின் ஒரு மஸ்ஜித் ஆகும் என்பது அவருக்கு தெரிந்த உடன் அவர் மிகவும் கோபப்பட்டுவிட்டார். மேலும், அவர் கண்ணாடிகளை உடைத்துவிட்டார். மேலும், அந்த கண்ணாடிகளை உடைக்கும்போதே, பாவம்! அவருக்கு காயம் ஏற்பட்டுவிட்டது. ஆனால், அல்லாஹ் அவருக்கு எவ்வாறு வழிகாட்டினான்? என்று பாருங்கள்!

அவர் கூறுகின்றார்: இரவில், கனவில் நான் கூச்சலிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன். மேலும் கடலில் மூழ்கிக் கொண்டிருப்பதாகவும் கண்டேன்.

அவருக்கு உதவிக்கான எந்த நம்பிக்கையும் இல்லாதபோது அவர் ஒரு கப்பலைக் கண்டார். அது அவரை காப்பாற்றுவதற்காக வந்து கொண்டிருந்தது. மேலும், அந்தக் கப்பலில் ஜமாஅத் அமீரையும், முரப்பியையும் கண்டார். அடுத்த நாள் காலை ஜுமுஆ நாளாக இருந்தது. அவர் மிஷன்ஹவுஸிற்கு வந்தார். மேலும் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்துவிட்டார்.

இதேபோன்று, தன்ஸானியாவில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட ஒரு சம்பவம் உள்ளது.

மவாபேமா (Mwabuma) என்ற ஒரு ஜமாஅத் ஸீமேவர் மண்டலத்தில் உள்ளது. அங்கு முஅல்லிம்கள் தப்லீக் செய்யத் தொடங்கியதாக கூறுகின்றனர். மஸ்ஜித் மற்றும் மிஷன்ஹவுஸ் கட்டுவதற்காக உள்ளூர் மக்களிடமிருந்து பிளாட் வாங்க விரும்பியபோது ஒவ்வொருவரும் கூறிய விலை மிகவும் அதிகமானதாக இருந்தது.

(அஹ்மதிகளாகிய) இவர்களுக்கு மஸ்ஜித் கட்டுவதற்காக எவரும் இடத்தை விற்பனை செய்ய வேண்டாம்; ஏனெனில் இவர்கள் மாயவித்தை செய்கின்றனர். மேலும், இவர்களிடத்தில் ஜின்கள் உள்ளனர். மேலும் திருக்குர்ஆனின் மூலமாக இவர்கள் விரும்பியவர்களை கொன்றுவிடுவார்கள்; எவருக்கும் தெரிய வராது என்று நமக்கு எதிராக உள்ளூர் பாதிரிமார்கள் ஒரு பிரச்சாரம் செய்து வந்தது விசாரித்தபோது தெரிய வந்தது.

எனவே அந்த அச்சத்தின் காரணமாக நமக்கு எவரும் பள்ளிவாசல் கட்டுவதற்காக நிலம் கொடுக்காமல் இருந்து வந்தனர். கிறித்தவர்களின் பகுதியாக அது இருந்தது. அப்போது, முஅல்லிம்கள் வீடு, வீடாகச் சென்று அந்த மக்களின் சந்தேகத்தை நீக்கி வந்தனர். மக்களின் கருத்துகளை மாற்றுவதற்கு முயற்சி செய்தனர். சில மாதங்களுக்குள், ஓர் இளைஞர் தனது ஒரு ஏக்கர் நிலத்தை நமக்கு கொடுப்பதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டார். அவரிடமிருந்து ஜமாஅத் நிலத்தை வாங்கிவிட்டது. இந்த மஸ்ஜிதிற்காக நிலத்தை விற்பனை செய்த பிறகு நிறைய அருட்கள் கிடைத்துள்ளன என்று அந்த இளைஞர் கூறினார். அவர் கூறுகின்றார்:

ஒரு நபர் பல ஆண்டுகளாக எனக்கு கடனைத் திருப்பிக் கொடுக்காமல் இருந்து வந்தார். மேலும், அதன் காரணமாக அவரது பல பணிகள் தடைபட்டுக் கொண்டிருந்தன. நிலத்தை விற்ற சில நாட்களுக்கு பிறகு அந்த நபர் சுயமே அனைத்து தொகையையும் திருப்பிக் கொடுத்துவிட்டார். மேலும், எனது அனைத்து கடன்களும் அதன் மூலம் தீர்க்கப்பட்டுவிட்டன. எவ்வாறு இருப்பினும், இந்த விஷயத்தினால் தாக்கத்திற்கு ஆளாகி அவர் தனது குடும்பத்துடன் அஹ்மதி ஆகிவிட்டார்.

அதன் பிறகு அவர்கள் கூறுகின்றனர்: அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கான எப்படிப்பட்ட காற்று வீசியது என்றால், நூற்றுக்கணக்கான மக்கள் அந்தப் பகுதியிலிருந்து பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டனர். மேலும், அங்கு ஒரு பெரிய மஸ்ஜித் மற்றும் மிஷன்ஹவுஸ் கட்டுவதற்கும் அல்லாஹ் ஜமாஅத்திற்கு நற்பேறு வழங்கிவிட்டான்.

அல்லாஹ் எவருக்கு நேர்வழி வழங்கவேண்டுமோ அவருடைய நேர்வழியின் ஏற்பாட்டையும் விநோதமான வழிமுறைகளில் செய்துவிடுகின்றான்.

சவுத்தோமே என்ற ஆஃப்ரிக்காவின் ஒரு பகுதி உள்ளது. அங்குள்ள முபல்லிக் இன்சார்ஜ் எழுதுகின்றார்கள்:

மராகஷ் நாட்டிலிருந்து ஒரு சுற்றுலா பயணி சவுதேமேவிற்கு வந்தார். இங்கு, முஸ்லிம்களின் ஏதாவது ஒரு பள்ளிவாசல் இருக்கின்றதா? என்று அவர் மக்களிடம் கேட்டார். அப்போது, அவருக்கு நமது பள்ளிவாசலின் முகவரியை மக்கள் கொடுத்தனர். அவர் ஜுமுஆ நம்முடன் தொழுதார். அப்போது, இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மிஷன் ஹவுஸ் ஆகும் என்பது அவருக்கு தெரிய வந்தது. அவர் சிறிது கேள்விகளைக் கேட்டார். அதன் பிறகு அவர் ஸிர்ருல் குலஃபா மற்றும் மஸ்ஹப் கே நாம் பர் கூன் என்ற நூல்களைப் படித்தார். mta அல் அரபியாவின் நிகழ்ச்சிகளைப் பார்த்தார். சிறிது நேரம் அங்கு அமர்ந்திருந்தார். அந்த நாட்களில் உலகளாவிய பைஅத் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது அல்லது அதன் ஒளிப்பதிவு (mta-வில்) வந்து கொண்டிருந்தது. அவர் அதைப் பார்த்தார்.

கூறுகின்றார்கள்: கடந்த வருடம் மார்ச் மாதம் அவர் மீண்டும் வந்தார். மேலும் நான்

பைஅத் படிவத்தை பார்க்க விரும்புகின்றேன் என்று அவர் கூறினார். கூறுகின்றார்கள்: நாங்கள் அரபியில் பைஅத் படிவத்தை அவருக்கு கொடுத்தோம். அவர் அந்த படிவத்தை நிரப்பிவிட்டு வந்துவிட்டார்.

(முபல்லிக் ஸாஹிப்) கூறுகின்றார்கள்: இவ்வளவு அவசரம் காட்ட வேண்டாம். சிறிது காலம் துஆ செய்து பின்னர் முடிவெடுங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். அதற்கு அவர் கூறினார்: நான் முழு இரவும் துஆக்கள் செய்து கொண்டிருந்தேன். எனது உள்ளம் நிம்மதி அடைந்து விட்டது. என்னால் இனியும் பொறுமை செய்ய முடியாது. இமாமிடம் பைஅத் செய்யாமல் நான் மரணித்துவிட்டால் அதற்கு யார் பதிலளிப்பார்? அவர் கூறினார்: அஹ்மதிய்யா ஜமாஅத் உண்மையில் இருப்பதை நான் கண்டுவிட்டேன். அப்போது, உங்களது நாட்டைச் சேர்ந்த மற்ற முஸ்லிம்கள் உங்களை எதிர்ப்பார்கள். உங்களது பெற்றோர்கள் எதிர்ப்பார்கள். எவ்வாறு எதிர்கொள்வீர்கள்? என்று நான் அவரிடம் கேட்டேன்.

அதற்கு அவர் கூறினார்: நான் அவர்களிடம் அதாவது பெற்றோரிடம் கூறிவிட்டேன். அவர்களுக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. இன்னும்கூறப்போனால் அவர்கள் மகிழ்ச்சியாக உள்ளனர். அடுத்து அவர் கூறினார்: அவர்கள் எதிர்த்தாலும் கூட எந்த வித்தியாசமும் ஏற்படாது. ஏனெனில் உண்மையான இஸ்லாத்தின் நிலையில் மரணம் வந்துவிட்டால் அதை விட (சிறந்த விஷயம்) எனக்கு வேறு எதுவும் கிடையாது.

முரப்பி ஸாஹிப் கூறுகின்றார்கள்; அவரது தந்தையும் என்னிடம் வீடியோவில் பேசினார். மேலும் மிகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

நான் எல்லா விஷயங்களையும் கேட்டுவிட்டேன். தற்போது நீ பைஅத் செய்துள்ளாய். எனவே நீ ஜமாஅத்தில் நிலைபெற்றிருக்க வேண்டும். மேலும் உனது உறுதிப்பாட்டை காட்ட வேண்டும் என்று அவர் தமது மகனுக்கு அறிவுரையும் செய்தார்.

தற்போது பாருங்கள்! மராகஷ் நாட்டில் அஹ்மதிகள் உள்ளனர்; ஜமாஅத் உள்ளது. ஆனால், அவ்வாறு இருந்தபோதிலும், அந்த நபருக்கு அங்கு ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் கிடைக்கவில்லை. அல்லாஹ் அவருக்கு ஆஃப்ரிக்காவின் தொலைதூரப் பகுதியிலுள்ள மற்றொரு நாட்டிற்கு அவரை அனுப்பினான். மேலும் அங்கு அவர் சென்றபோது அவரது நேர்வழிக்கான ஏற்பாட்டை உருவாக்குகின்றான்!

உஸ்பக்கிஸ்தானில் ஆலிம் பாபா யோவூ ஸாஹிப் என்ற ஒரு நபர் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்:

நான் முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தேன். எனது வயது 31 ஆகும். நான் உஸ்பக்கிஸ்தான் நாட்டின் தாஷ்கந்த் நகரத்தைச் சேர்ந்தவன். திருக்குர்ஆன் கற்பதற்காக ஆசிரியரை நான் தேடிக் கொண்டிருந்தேன். அப்போது நான் பாபுர் ஜானை சந்தித்தேன். உண்மையான இஸ்லாத்தைப் பற்றி அன்னாரிடமிருந்து நான் செவியுற்றேன். அன்னாரிடம் நான் திருக்குர்ஆனைக் கற்றேன். அன்னார், இந்த உண்மையை ஒப்புக் கொள்வதில் எனக்கு உதவி செய்தார்கள். ஆக, நான் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்துவிட்டேன்.

அவர் திருக்குர்ஆன் கற்பதற்காக ஆசிரியருக்கான ஏற்பாட்டையும் அல்லாஹ் அஹ்மதியின் மூலமாக செய்தான். இதுபோன்ற ஏராளமான சம்பவங்கள் இருக்கின்றன. இது தற்செயலான நிகழ்வு அல்ல. உலகின் பல்வேறு நாடுகளில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. நான் முன்னரும் ஒரு சம்பவத்தைக் கூறியுள்ளேன். இது அல்லாஹ்வின் உதவிக்கான சிறப்பு அடையாளம் ஆகும்.

அடுத்து, உஸ்பக்கிஸ்தானிலேயே அஸீம் அவஃப் என்ற மற்றொருவர் இருக்கின்றார். கூறுகின்றார்: நான் ஒரு முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தேன். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நான் முறையாக தொழத் தொடங்கினேன். பின்னர், திருக்குர்ஆன் மொழியாக்கம் படிக்கத் தொடங்கிவிட்டேன். ஒருநாள் ஒரு வாசகம் என்னை வந்தடைந்தது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியிருந்தார்கள்: அதாவது, எனது சமுதாயத்தில் எப்படிப்பட்ட மக்கள் தோன்றுவார்கள் என்றால் அவர்கள் எப்போதும் உண்மையில் இருப்பார்கள். மேலும், எவரும் அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியாது. இந்த சொற்கள் எனது உள்ளத்தில் நுழைந்துவிட்டன.

அவர் கூறுகின்றார்: தொழுகையிலும், துஆக்களிலும் அந்த மக்களில் நான் இணைந்துவிட வேண்டும் என்று இந்த துஆவை அல்லாஹ்விடம் செய்ய தொடங்கிவிட்டேன். அதன் பிறகு எனக்கு பல கஷ்டங்களை எதிர் கொள்ள நேரிட்டது. நான் பணியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டேன். ஆனாலும், நான் துஆ செய்து கொண்டிருந்தேன். பின்னர் என்னிடம் திருக்குர்ஆன் கற்க வேண்டும் என்ற ஆசை உருவானது. அல்லாஹ் (மீண்டும் அதே) பாபுர் ஸாஹிப் ஆசிரியரை என்னை சந்திக்க வைத்தான். ஆசிரியர் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்தவராக இருந்தார். எனக்கு அது தெரியாது. முதன் முதலில் நான் திருக்குர்ஆன் ஓதக் கற்றேன். ஒருநாள் நான் கஃபத்துல்லாஹ்வை கனவில் கண்டேன். அதற்கு அருகில் சென்று கைகளால் அதனை தொட்டேன். பின்னர், நான் உளூ செய்யவில்லையே என்ற எண்ணம் எனக்கு வந்தது. நான் உளூ செய்வதற்காக குளியலறைக்கு சென்றேன். பின்னர் நான் கண்விழித்துவிட்டேன்.

கூறுகின்றார்: எவ்வாறு இருப்பினும், அஹ்மதி ஆசிரியரிடம் கல்வி கற்பதற்கான பணி தொடர்ந்து நடைபெற்று வந்தது. வானத்திலிருந்து ஈஸா இப்னு மர்யம் இறங்குவது தொடர்பாக ஒருநாள் அன்னாரிடம் நான் கேட்டேன். ஈஸா இப்னு மர்யம் இறந்துவிட்டார்கள்; மேலும் எந்த மனிதர் ஈஸா இப்னு மர்யமின் வடிவில் தோன்ற இருந்தாரோ அவர் இமாம் மஹ்தி ஆவார் என்று அன்னார் கூறினார்கள். பின்னர் நான் ஆய்வு செய்தேன். மேலும் அதனை அறிந்து கொண்டேன். மேலும், அந்த மனிதர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) ஆவார்கள் என்று நான் எனது ஆசிரியரிடம் கூறினேன்.

ஆசிரியர் அவருக்கு தப்லீக் செய்தார்கள். அன்னார் வெளிப்பட்டுவிட்டார்கள். நீங்கள் சுயமே தேடுங்கள். அன்னார் இமாம் மஹ்தி ஆவார்கள் என்று அன்னார் கூறினார்கள். எனவே அவரும் ஆராய்ச்சி செய்தார். மேலும், அவர் சுயமே இன்டர்நெட்டில் ஆய்வு செய்து மிர்ஸா குலாம் அஹ்மத் அவர்களே அந்த இமாம் மஹ்தி ஆவார்கள் என்பதை அறிந்து கொண்டார்.

கூறுகின்றார்: நான் எனது ஆசிரியரிடம் அதனைக் கூறியபோது, நாம் யாரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோமோ அந்த இமாம் மஹ்தி மிர்ஸா குலாம் அஹ்மத் அவர்களே ஆவார்கள் என்பதை ஆசிரியர் அவர்களும் உண்மைப்படுத்தினார்கள்.

கூறுகின்றார்: அனைத்து அடையாளங்களும் முழுமை அடைந்த பிறகும் இமாம் மஹ்தி தொடர்பாக நான் சந்தேகத்தை வெளிப்படுத்தினேன். பின்னர் எனது ஆசிரியர் அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் குறித்து கூறினார்கள். நானும் அதே ஜமாஅத்தைச் சேர்ந்தவன் ஆவேன் என்றும் அன்னார் கூறினார்கள். அது, அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத் தற்போது எண்ணிக்கையில் சிறியதாக உள்ளது. என்னிடம் உங்களைப் போன்ற இன்னும் மாணவர்கள் உள்ளனர் என்றும் அன்னார் கூறினார்கள். மேலும், தமது மாணவர்களுடன் என்னை சந்திக்க வைத்தார்கள்.

எவ்வாறு இருப்பினும், நான் ஆராய்ச்சி செய்தேன். மேலும், துஆக்கள் மற்றும் ஆய்விற்குப் பிறகு, அல்லாஹ் எனது துஆக்களை ஏற்றுக் கொண்டு விட்டான் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். பின்னர், நான் பைஅத் செய்துவிட்டேன்.

அதேபோன்று உஸ்பக்கிஸ்தானில் மற்றொரு நபர் இருக்கின்றார். அவருடைய சம்பவமும் இதேபோன்றது தான். அவரது சமுதாயத்திற்கும் பைஅத் செய்வதற்கான நற்பேறு கிடைத்துள்ளது. மேலும், அவரும் கடந்த வருடம் பைஅத் செய்துவிட்டார்.

அடுத்து, ஆஃப்ரிக்காவைச் சேர்ந்த ஒரு நாட்டின் அறிக்கை உள்ளது. அங்குள்ள

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

ஜமாஅத் முபல்லிக் எழுதுகின்றார்: அவரும், உள்ளூர் முஅல்லிம் ஸாஹிபும் ஒரு ஜமாஅத்தின் கூட்டத்தை முடித்துக் கொண்டு திரும்பி வந்துக் கொண்டிருந்தார்கள். இரவு நேரமாக இருந்தது. பயணம் தொலைவில் செய்ய வேண்டியதிருந்தது. வழியில், ஒரு கிராமத்தைக் கடந்து சென்றனர். அப்போது அங்கிருந்த அனைத்து மக்களும் சாலையோரத்தில் நின்று கொண்டிருந்தனர்.

அவர்கள் எங்களை தடுத்தார்கள். மேலும், இன்று காலை நீங்கள் இங்கிருந்து கடந்து சென்றதை நாங்கள் கண்டிருந்தோம். நீங்கள் திரும்பி வருவீர்கள் என்று எங்களுக்கு நம்பிக்கை இருந்தது. நாங்கள் வெகு நேரமாக உங்களுக்காக காத்திருக்கின்றோம். நாங்கள் உங்களிடம் கேட்க விரும்புகின்றோம்; நீங்கள் எங்களது கிராமவாசிகள் மீது அதிருப்தியில் உள்ளீர்களா என்ன? அக்கம் பக்கத்தில் உள்ள அனைத்து கிராமமும் உங்களின் உறுப்பினர்கள் ஆவர். ஜமாத் நிறுவப்பட்டுள்ளது. ஆனால், நீங்கள் எங்களது கிராமத்தில் இந்த தூதுச் செய்தியை எட்ட வைக்கவில்லையே! என்று அவர்கள் கூறினர்.

ஆக, கூறுகின்றார்: நாங்கள் அப்போதே அங்கு சென்றடைந்தோம். தப்லீக் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும், அல்லாஹ்வின் அருளால் அங்கு பைஅத்துகளும் நிகழ்ந்தன. உண்மையைத் தேடுங்கள் என்று இறைவன் மக்களின் உள்ளங்களில் எண்ணங்களை ஏற்படுத்துகின்றான்!

சென்ட்ரல் ஆஃப்ரிக்காவின் முபல்லிக் இன்சார்ஜ் ஸாஹிப் கூறுகின்றார்கள்: நாகாலா என்ற கிராமத்தைச் சேர்ந்த ஓர் அஹ்மதி அல்லாத இமாம் தப்லீக் தொடர்பாக எங்களது கிராமத்திற்கு வந்தார். மஸ்ஜிதைக் கண்டார். மேலும், இதை யார் கட்டியது? என்று கேட்டார். அஹ்மதிகள் கட்டினர் என்று பதில் கொடுக்கப்பட்டது. மாஷாஅல்லாஹ்! மிகவும் அழகிய பள்ளிவாசல் ஆகும் என்று கூறினார். இரண்டாம் நாள், இந்த மவ்லவி ஸாஹிப் சென்டரல் மிஷன்ஹவுஸ் பான்கீ என்ற இடத்திற்கு வந்தார். முபல்லிக் ஸாஹிப் அவர்களிடம் ஜமாஅத்தைக் குறித்து கேள்விக் கேட்டுக் கொண்டிருந்தார். இறுதியில், உங்களது ஜமாத்தில் எவ்வாறு இணைய முடியும்? என்று அவர் முபல்லிக் ஸாஹிபிடம் கேட்டார். அப்போது முபல்லிக் ஸாஹிப் கூறினார்:

ஈமானின் தொடர்பு என்பது உள்ளத்துடன் அமைந்திருக்கின்றது. நீங்கள் ஜமாஅத்தின் கொள்கைகளுடன் உடன்படுகின்றீர்கள் என்றால்,பின்னர் உங்களது உள்ளம் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டுவிட்டது. எனினும், எங்களிடத்தில் பைஅத் படிவமும் உள்ளது. அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பத்து நிபந்தனைகளை எடுத்துரைத்துள்ளார்கள். அதனை நீங்கள் படியுங்கள்.

அவருக்கு பைஅத் படிவம் கொடுக்கப்பட்ட போது அவர் அதனை படிக்கத் துவங்கினார்.

கூறுகின்றார்கள்: அப்போது அவர் படித்துக் கொண்டிருந்தார். அந்நிலையில், அவரது கண்களிலிருந்து கண்ணீர் வடிந்துக் கொண்டிருந்தது. அவரிடம் அழுவதற்கான காரணம் கேட்கப்பட்டபோது, அவர் இவ்வாறு பதில் கூறினார்: நானும் என்னை நானே ஆலிமாக கருதுகின்றேன். மற்ற மவ்லவிகளிடமிருந்தும் ஜமாஅத்தைக் குறித்து ஏராளமான விஷயங்களை கேட்டுள்ளேன். மிகவும் தவறான விஷயங்களையே கேட்டுள்ளேன். நாம் ஜமாஅத்தைக் குறித்து என்னக் கருதிக் கொண்டிருந்தோம்! ஆனால், உங்களின் போதனையோ வேறொன்றாக உள்ளதே! என்று கூறினார். மேலும் அவர் இந்த பைஅத்தின் பத்து நிபந்தனைகளை வாசித்துக் கொண்டிருக்கும்போது, எனக்கு எனது பழைய வாழ்க்கையைப் பற்றிய எண்ணம் வந்துவிட்டது. எனவே என்னால் உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியவில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத் ஓர் உண்மையான, நேர்மையான ஜமாஅத் ஆகும்; அவர்களின் மஸ்ஜிதின் திசையும் கிப்லாவின் பக்கம் உள்ளது. நாங்கள் தொழுகின்ற அதே தொழுகையே (உங்களிடம்) உள்ளது. நாங்கள் ஓதுகின்ற அதே திருக்குர்ஆன் தான் (உங்களிடம்) உள்ளது. மேலும், நான் இன்று உண்மையான உள்ளத்துடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தை ஒப்புக் கொள்கின்றேன் என்றும் அவர் கூறினார். எவ்வாறு இருப்பினும், அவருக்கு மேலும் நூல்களும் வழங்கப்பட்டன.

மேலும் அவர் கூறுகின்றார்: அந்தப் புத்தகங்களைப் படித்து தற்போது மற்ற மவ்லவிகளின் வாயை நான் அடைக்கச் செய்வேன்.

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தை எவ்வாறு அதிகரித்து வருகின்றான்?, ஏற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கையை எவ்வாறு உயர்த்தி வருகின்றான்? (என்று பாருங்கள்!).

கயானா நாட்டின் ஜமாஅத் முபல்லிக் ஸாஹிப் எழுதுகின்றார்: லிண்டன் என்ற ஜமாஅத்தில் தொடர்ச்சியாக புக்ஸ்டால் அமைக்கின்ற மற்றும் மக்களுக்கு பிரசுரங்கள் விநியோகிக்கும் நிகழ்ச்சி நடக்கின்றது. ஒரு நாள் ஒருவரின் தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் அவர் இவ்வாறு கூறினார்: நான் உங்களுடைய பிரசுரத்தைப் பார்த்தேன்; எனது வீட்டிற்கு அருகிலேயே தொழுகை சென்டர் உள்ளது என்பதை நான் அறிந்திருக்கவில்லை.

எவ்வாறு இருப்பினும், அவர் ஜுமுஆ தொழுகைக்கு வந்தார்.

மேலும், நான் இரண்டு ஆண்டுகளாக முஸ்லிமாக உள்ளேன்; ஆனால், எனக்கு திருக்குர்ஆன் ஓதவும் தெரியாது: தொழுகையைக் கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பமும் எனக்கு கிடைக்கவில்லை. எனவே எனக்கு கற்றுக் கொடுங்கள் என்று அவர் கூறினார். வாருங்கள்! என்று அவரிடம் கூறப்பட்டது. மேலும் அவரிடம் எச்சரிக்கையாகவும் இருந்து வந்தனர். ஏனெனில், அங்கு சில மக்கள் இருக்கின்றனர். அவர்கள் தவறான வகையான மக்களாக இருக்கின்றனர். அவர்கள் யாசிப்பதற்காக மட்டுமே வருகின்றனர்.

எவ்வாறு இருப்பினும், கூறுகின்றார்: நான் அவரிடம் வாருங்கள் என்று கூறினேன். இவர் உண்மையிலேயே மார்க்கத்தை கற்க விரும்புகின்றார் என்றால் அது தெரிந்து விடும். அந்த நபரும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தார். மேலும், திருக்குர்ஆன் கற்றுக் கொண்டிருந்தார். மேலும், மிக நீண்ட காலம் கற்றப் பிறகும் அவர் எதையும் யாசிக்கவில்லை. முபல்லிக் கூறுகின்றார்: அந்நிலையில், இவர் மார்க்க விவகாரத்தில் மிகவும் கண்ணியமானவர் என்பது எனக்கு தெரிய வந்தது. பின்னர் நான் அவருக்கு ஜமாஅத்தைக் குறித்த அறிமுகத்தை செய்து வைத்தேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நிழற்படத்தை அவரிடம் காட்டினேன். அவர் பைஅத் செய்துவிட்டார். அவருக்கு இஸ்லாமியப் பெயரும் வைக்கப்பட்டது. பின்னர், சில காலம் கழிந்து நான் ஜமாஅத்தின் முஅல்லிமாக ஆக விரும்புகின்றேன் என்ற தனது எண்ணத்தை அவர் வெளிப்படுத்தினார்.

எவ்வாறு இருப்பினும், அங்குள்ள ஜமாஅத் என்னிடம் கேட்டது. நான் அவர்களிடம் ஆகட்டும்! என்று கூறிவிட்டேன். உண்மையிலேயே அவர் ஆர்வமுடையவராக இருந்தால் அவரை முஅல்லிம் ஆக்குங்கள். தர்பிய்யத் கொடுங்கள் என்று கூறினேன். அல்லாஹ்வின் அருளினால் தற்போது அவருக்கு தர்பிய்யத் கொடுக்கப்பட்டுவிட்டது. தொழுகையையும் முழுமையாக தொழுகின்றார். ஜுமுஆ தொழுகின்றார். திருக்குர்ஆனின் போதனைகளிலிருந்து விளக்கவுரைகளைப் படித்து தற்போது அவர் தர்ஸும் கொடுக்கின்றார். குத்பாக்களும் கொடுக்கின்றார்.

கூறுகின்றார்கள்: அவர் பைஅத் செய்த சிறிது காலத்திற்குப் பிறகு தொழுகை சென்டரில் ஒரு காண்காட்சி நடத்தப்பட்டது. அதில் அவருடைய பெற்றோரும் வந்தனர். அவரது தந்தை இஸ்லாத்தின் பெரிய எதிரியாக இருந்தார். ஆனால், அவரது தாயார் கூறினார்: ஒரு காலத்தில் இஸ்லாத்தில் அவருக்கு ஆர்வம் இருந்தது. குறிப்பாக பெண்கள் பர்தா அணிவது அவருக்கு மிகவும் பிடித்திருந்தது என்ற விஷயத்தை அவரது தாயார் வெளிப்படுத்தினார். அதன் காரணமாக அவரது தாயாருக்கும் ஆர்வம் உருவானது. எவ்வாறு இருப்பினும், அவரிடம், அதாவது முஅல்லிமிடம், நீங்கள் உங்களது பெற்றோருக்கும் தப்லீக் செய்யுங்கள். மேலும் அவர்களையும் அஹ்மதிய்யத்தில் இணைத்துவிடுங்கள். இஸ்லாமிய போதனையை அவர்களுக்கு கொடுங்கள் என்று கூறப்பட்டது.

அவர்கள் தங்களது மார்க்கத்தில் மிகவும் உறுதியானவர்கள் ஆவர். எனது தாயார் தேவாலயம் செல்லக் கூடிய பெண்மணி ஆவார். அவர் ஞானஸ்தானமும் பெற்றுள்ளார் என்று அவர் கூறினார்.

ஆக, எவ்வாறு இருப்பினும் கூறுகின்றார்கள்: நாங்கள் துஆ செய்கின்றோம். அல்லாஹ்வே அவரின் உள்ளத்தை இஸ்லாத்தின் பக்கம் திரும்பச் செய்துவிடுவாயாக என்று நீங்களும் உங்களது தாயாருக்காக துஆ செய்யுங்கள் என அந்த இளைஞனிடமும் கூறப்பட்டது.

கூறுகின்றார்: ஒருநாள் அவரது தாயார் சுயமே தனது மகனிடம் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டார். ஜுமுஆ தொழுகையிலும் வர தொடங்கிவிட்டார். பின்னர் ஒரு நாள் திடீரென சுயமே அவர் கூறினார்: நான் பைஅத் செய்ய விரும்புகின்றேன். பின்னர் அவர் ஜமாஅத்தில் இணைந்தும் விட்டார். மேலும் அல்லாஹ்வின் அருளினால், தொடர்ந்து மக்கள் ஜமாஅத்தில் இணைந்து

வருகின்றனர். ஒவ்வொரு ஜுமுஆவிலும் வருகின்றனர். தொழுகைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

ஜமாஅத்தில் இணைந்த பிறகு அல்லாஹ்வின் அருளினால் தனது உடல்நலத்திலும், செல்வத்திலும் தான் கிறித்தவ மார்க்கத்தில் இருந்தபோது கிடைத்திராத அதிகமான பரக்கத் தற்போது ஏற்பட்டுள்ளது என்பதையும் அவர் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் தற்போது அவரது தாயார் தொடர்ச்சியாக mtaவையும் பார்த்து வருகின்றார்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அல்லாஹ்வின் வாக்குறுதி முழுமையடைந்தது தொடர்பான இந்த சில சம்பவங்களை நான் எடுத்துரைத்துள்ளேன். இதுபோன்ற சம்பவங்கள் ஏராளம் உள்ளன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று எதிரிகள் தங்களது உச்சபட்ச முயற்சிகளை செய்து வருகின்றனர். ஆனால் மற்றொரு பக்கம் அல்லாஹ் உலகத்தின் எல்லா நாடுகளிலும் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான புதிய வழிகளை திறந்து கொண்டிருக்கின்றான்.

எனவே எங்கு இந்த விஷயத்திற்காக நாம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டுமோ அங்கு நமது நிலைமைகளையும் ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். மேலும், நமது ஈமானை உறுதிப்படுத்துவதற்காகவும் முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். நமது செயல் நிலைகளை சிறந்ததாக ஆக்கிக் கொள்ள வேண்டும். **சோதனைகள் வரவேச் செய்யும். எனினும், இறுதி வெற்றி அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்ட ஜமாஅத்திற்கே உரியதாகும். எனவே ஒருபோதும் நமது ஈமானை தடுமாற்றம் அடைய விடக்கூடாது என்ற இந்த விஷயத்தை நாம் நமது சந்ததிகளிடமும் நிலைபெறச் செய்ய வேண்டும். அல்லாஹ் புதிதாக வரக்கூடியவர்களுக்கும், ஏற்கனவே வந்தவர்களுக்கும் உறுதிப்பாட்டை வழங்குவானாக. மேலும், அவர்கள் அனைவரையும் ஈமானிலும், உறுதியிலும் அதிகரித்துக் கொண்டே செல்வானாக.**

தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்புகளை எடுத்துரைப்பேன். அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையும் பின்னர் நடத்தப்படும். முதலாவது நற்குறிப்பு, சியால்கோட்டைச் சார்ந்த மர்ஹூம் குலாம் காதிர் ஸாஹிப் அவர்களின் துணைவியாரன பர்வீன் அக்தர் ஸாஹிபா அவர்களுடையது ஆகும். 90 வது வயதில் கடந்த நாட்களில் அன்னார் மரணமடைந்துள்ளார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாருக்கு மூன்று மகன்களும், நான்கு மகள்களும் உள்ளனர். ஒரு மகன் ஆரிஃப் மஹ்மூத் ஸாஹிப் பெனின் நாட்டில் ஜமாஅத்தின் முபல்லிக்காக இருக்கின்றார். செயல் களத்தில் இருந்ததன் காரணமாக அன்னாரால் தமது தாயாரின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை.

ஜமாஅத் முபல்லிக் ஆரிஃப் மஹ்மூத் ஸாஹிப் கூறுகின்றார்:

எனது தாயார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியான ஹஸ்ரத் சவ்த்ரி இமாமுத்தீன் ஸாஹிப் சவ்ஹான் அவர்களின் மகன் வழிப் பேத்தி ஆவார்கள். மேலும், ஜமாஅத்தின் முஅல்லிம் குலாம் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மகளாக இருந்தார்கள். அன்னார் காதியானில் பிறந்தார்கள். காதியானில் துவக்கக் கல்வி பயின்றார்கள்.

கூறுகின்றார்கள்: எனது தாயார் இவ்வாறு கூறிவந்தார்: எங்களது குழந்தைப் பருவத்தின் பெரும்பாலான நேரம் காதியானில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுடன் அன்னாருக்கு தொண்டாற்றுவதில் கழிந்து வந்தது. மேலும், இவ்வாறு ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் அன்னாருக்கு தர்பிய்யத் வழங்கினார்கள். மார்க்கக் கல்வி மற்றும் திருக்குர்ஆனை அன்னாரிடமிருந்தே நான் கற்றுக் கொண்டேன். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களுக்குத் தொண்டாற்றியவாறு பெரும்பாலான நேரம் அன்னாருடன் கழிந்து வந்தது. கூறுகின்றார்கள்: தமது சம்பவங்களை தூங்குவதற்கு முன்னர் கூறிவந்தார்கள். சிலமுறை அன்னார் கூறிவந்தார்கள்: அதாவது, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் (தமது தாயார்) ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களை சந்திப்பதற்காக இரவில் வீட்டிற்கு வருவார்கள். மேலும், நான் அன்னாருக்கு சேவை செய்து கொண்டிருப்பதை பார்த்துவிட்டு, உங்களது நல்ல நண்பருக்காகவும் துஆ செய்யுங்கள் என்று கூறிவந்தார்கள்.

கூறுகின்றார்கள்: அன்னாருக்கு திருமணம் நிகழ்ந்தபோது, சிறிது காலம் கழித்து 1953-ஆம் ஆண்டில் (நாட்டின்) நிலைமை மோசமாகிவிட்டது. கிராமத்தின் சில மக்கள் பலவீனத்தை வெளிப்படுத்தினர். ஆனால், இவர்கள் அல்லாஹ்வின் அருளினால் மார்க்கத்தில் நிலைத்திருந்தார்கள். மேலும், தமது கணவரையும் உறுதியாக வைத்தார்கள். அதன் பிறகு அன்னார் ஒரு மவ்லவி ஸாஹிபிடம், திருக்குர்ஆன் ஓதத் தொடங்கிவிட்டார்கள். மேலும், தொழுகை மற்றும் சூராக்களை மனனம் செய்ய தொடங்கிவிட்டார்கள். அதேபோன்று தமது பகுதியில் ஒரு சிறிய மஸ்ஜிதை கட்டி, ஜமாஅத் ரீதியில் அதனை தமது ஒரு தலைமையகமாக ஆக்கிக் கொண்டார்கள்.

இராணுவத்தில் பணியாற்றி வந்த அன்னாரின் மூத்த மகன் காலித் மஹ்மூத் கூறுகின்றார்: மர்ஹூமா உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கி வந்தார்கள். நீங்கள் மார்க்கத்தில் உறுதியுடன் நிலைபெற்றுவிட்டால் பின்னர் உலக விவகாரங்கள் தானாகவே சரியாகிவிடும் என்று எங்களுக்கும் கூறிவந்தார்கள்.

கூறுகின்றார்: குழந்தைப் பருவம் முதலே எங்களிடம் தொழுகின்ற வழக்கத்தை ஏற்படுத்திவிட்டார்கள். மேலும், பள்ளிவாசல் வீட்டிலிருந்து சிறிது தொலைவிலேயே இருந்தது. எனவே ஃபஜ்ர் தொழுகையின் போது எங்களை அனுப்பி வைப்பதற்காக பள்ளிவாசல் வரை வருவார்கள். முஹல்லாவில் ஏராளமான அஹ்மதி அல்லாத பெண்கள் இருந்தார்கள். அவர்களுக்கும் அன்னார் திருக்குர்ஆன் போதனையை வழங்கி வந்தார்கள்.

தற்போது அங்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்க முடியாது. ஆனால், முந்தைய மக்களிடம் எந்த அளவு கண்ணியம் இருந்தது என்றால், ஏராளமான அஹ்மதி அல்லாத மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அப்போது அஹ்மதிகளிடம் இருந்தே திருக்குர்ஆனை கற்று வந்தார்கள்.

அடுத்து, அன்னாரின் மகன் எழுதுகின்றார் அல்லது அநேகமாக மகள் எழுதுகின்றார்:

பொதுவாக, கிராமப்புறங்களில் பெண் பிள்ளைகளுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதற்கான நடைமுறை இல்லாமல் இருந்தது. அன்னாரின் மகள் பெரியவளானபோது, அன்னாரின் தாயார் பள்ளிக்கூடத்தில் சேர்க்கத் தொடங்கினார். அப்போது அன்னாரின் பாட்டனார் ஆட்சேபனை செய்தார். மர்ஹூமா மிகவும் கண்ணியத்துடன் தொடர் முயற்சியால் பெண் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க வேண்டும் என்ற தமது கருத்தை ஏற்கச் செய்தார்கள். குறைந்தபட்சம் ஜமாஅத்தின் நூல்களை படிக்கும் அளவுக்கு மற்றும் பிள்ளைகளுக்கு தர்பிய்யத் செய்யக்கூடிய அளவிற்காவது கண்டிப்பாக பெண்பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க வேண்டும் என்று அன்னார் எப்போதும் கூறிவந்தார்கள்.

மான்காவைச் சார்ந்த ரஷீத் அஹ்மத் ஸாஹிப் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: எங்களது தங்கும் இடம் அன்னார் தங்கியிருந்த இடத்திற்கு அருகில் இருந்தது. நாங்களும் அன்னாரைப் பார்த்து அஹ்மதி ஆகிவிட்டோம். ஆனால், தொழுகையின் பக்கம் கவனம் இருக்கவில்லை. அன்னார் தங்குமிடத்திற்கு வருகை தரும்போது எங்கள் அனைவருக்கும் தொழும்படி அறிவுரை செய்வார்கள். நாங்கள் பள்ளிவாசல் தொலைவில் இருப்பதாக சாக்குபோக்கு கூறுவோம். அன்னார் மௌனமாகிவிடுவார்கள்.

அடுத்து கூறுகின்றார்: நாங்கள் பார்த்துள்ளோம்: அன்னார் வயலிலிருந்து மண்ணை தலையில் சுமந்து கொண்டு வீட்டிற்கு எடுத்து வருவார்கள். இவ்வாறு மண் எடுத்து வரும் தொடர் ஒரு வாரம் வரை நீடித்துக் கொண்டிருக்கும். பின்னர் அந்த மண்ணைக் கொண்டு வசிப்பிடத்திற்கு மேற்குப் பக்கம் ஒரு மதிலை எழுப்பினார்கள். மேலும், இரண்டு அடி உயரத்தில் சுவரைக் கட்டினார்கள்.

பின்னர் வீட்டிலிருந்து போர்வை எடுத்து வந்து விரித்து விட்டார்கள். மேலும், பின்னர் பாருங்கள்! இங்கு பள்ளிவாசல் இல்லை. எனவே தொலைவில் செல்கின்றோம் என்று நீங்கள் கூறிவந்தீர்கள். ஆனால் தற்போது இங்கு உங்களது பகுதியில் மஸ்ஜிதைக் கட்டிவிட்டோம். இங்கு வந்து ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுங்கள். இனி தொழுகையில் சோம்பல் காட்டக் கூடாது என்று அன்னார் கூறினார்கள்.

அந்த சான்றோர்களை தமது உயரிய முன்மாதிரியால் தமது கருத்தை ஏற்கச் செய்த நபர்கள் இவர்களே! அவர்கள் எந்த ஒரு சாக்குப் போக்கையும் உருவாக்கிக் கொள்ளவில்லை. மாறாக, எப்படிப்பட்ட செயல் முன்மாதிரிகளை சுயமே காட்டினார்கள் என்றால், அதனால் எதிராளி நிர்பந்தத்திற்கு ஆளாகிவிடுவார்.

அடுத்து, அன்னாரின் மகள் எழுதுகின்றார்: பொறுமை மற்றும் இறை திருப்தியில் மூழ்கி இருந்தார்கள். எங்களுக்கும் அறிவுறுத்தி வந்தார்கள்.

மேலும், ஒருபோதும் பொறுமையின் கயிற்றை கைவிட்டுவிடாதீர்கள்; கணவர் வீட்டில் என்ன கிடைத்தாலும் அதில் திருப்தி கொள்ளுங்கள்; மேலும் இறைவனின் திருப்தியில் எப்போதும் திருப்தி கொள்ளுங்கள்; தொழுகையை தொடர்ந்து நிறைவேற்றி வாருங்கள்; மேலும் உங்களது பிள்ளைகளையும் இதனை பின்பற்றச் செய்யுங்கள் என்ற ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் இந்த அறிவுரையை கருத்தில் கொள்ளுங்கள் என்று எங்களிடம் கூறிவந்தார்கள். இதனால், அல்லாஹ் செல்வத்தில், உணவில் அருள் வழங்குவான் என்றும் அன்னார் கூறிவந்தார்கள்.

முரப்பியாக இருக்கின்ற அன்னாரின் மகன் கூறுகின்றார்: நான் ஜாமிஆவில் நுழைந்தபோது, மகனே! படிப்பில் உயர்ந்த இடத்தை பெறமுடியவில்லை என்றாலும் பரவாயில்லை. ஆனால், காலத்தின் இமாமிற்கு கட்டுப்படுவதில் எப்போதும் உயர்ந்த இடத்தில் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று என்னிடம் கூறினார்கள். அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும், அன்னாரின் துஆக்களை அன்னாரின் பிள்ளைகளுக்கு முழுமை செய்வானாக. (ஆமீன்)

இரண்டாவது நற்குறிப்பு, கட்டியாலியானைச் சார்ந்த மர்ஹூம் சவ்த்ரி வஸீம் அஹ்மத் நாஸிர் ஸாஹிப் அவர்களின் துணைவியாரான மும்தாஸ் வஸீம் ஸாஹிபா அவர்களுடையது ஆகும். கடந்த நாட்களில் அன்னாரும் மரணமடைந்துள்ளார்கள்.

إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னாரின் மகனும் ஸேம்பியா நாட்டில் ஜமாஅத்தின் முபல்லிக்காக உள்ளார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பிரபலமான ஸஹாபியாகிய லாஹூரின் தலைவர் ஹஸ்ரத் மியான் சராக்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர் மர்ஹூமா ஆவார்கள். மர்ஹூமா, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியாகிய ஹஸ்ரத் மியான் அப்துர் ரஷீத் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகள் வழிப்பேத்தியும், ஈஸா களிம்பு பிரபலம் ஹஸ்ரத் ஹகீம் முஹம்மது ஹுஸைன் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகன் வழி கொள்ளுப் பேத்தியும் ஆவார்கள். மர்ஹூமா மிகவும் மகிழ்ச்சிகரமான இயல்பையும், மென்மையான உள்ளம் படைத்தவரும், எல்லாராலும் நேசிக்கப்பட்டவராகவும், அன்பு மற்றும் பரிவின் வடிவமாகவும் இருந்தார்கள். அனைவரும் அன்னாரின் நற்பண்புகளை ஒப்புக் கொள்கின்றனர். கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்பிற்கு மிகவும் கண்ணியம் அளித்து வந்தார்கள்.

எப்போதும் துஆவிற்காக எனக்கு கடிதம் எழுதி வந்தார்கள். கடிதம் எழுதுங்கள் என்று மற்றவர்களுக்கும் மர்ஹூமா அறிவுறுத்தி வந்தார்கள். தொடர்ந்து தொழுகையை நிறைவேற்றியும் திருக்குர்ஆன் திலாவத்தும் செய்து வந்தார்கள். வாழ்நாளின் இறுதி வரை சந்தாக்களை முறையாக செலுத்துவதை பேணி வந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் B.A. பட்டம் பெற்றிருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: எனது தந்தையார் பணியிலிருந்து ஓய்வு பெற்று காராச்சியிலிருந்து கிராமத்திற்கு இடம் மாறுதல் ஆனார்கள். அப்போது அங்கு ஆண் குழந்தைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் காயிதா மற்றும் திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்தார்கள். அதுமட்டுமின்றி உலகக் கல்வியையும் கற்றுக் கொடுத்து வந்தார்கள். நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். ஆனால், மிகவும் பொறுமையுடன் தமது நோயை சகித்துக் கொண்டார்கள். எந்த ஒரு முறையீடும், புகாரும் செய்யவில்லை.

முரப்பி ஸாஹிப் எழுதியுள்ளார்கள்: பெரியவராக இருந்தபோதிலும் ஒருவேளை தவறு மேல் தவறு நடந்தால் எப்போதும் மன்னிப்புக் கோரி வந்தார்கள்.

அன்னாரின் இரண்டு மகன்கள் வக்ஃப் செய்துள்ளனர். மேலும், மிகவும் மகிழ்ச்சியுடன் அன்னார் தமது மகன்களை வக்ஃப் செய்துள்ளார். மேலும், தமது மகன்கள் வக்ஃப் செய்யப்பட்டுள்ளனர் என்ற விஷயத்தில் அன்னார் மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்தார்கள். அன்னாரின் தந்தையார் இரண்டு திருமணங்கள் செய்திருந்தார்கள். முதலாவது தாயாரின் மரணத்திற்குப் பிறகு, கூறுகின்றார்கள்: எங்களது அந்த சகோதரர்களையும் தமது சொந்தப் பிள்ளைகளைப் போன்று வளர்த்தார்கள். மேலும், ஒருபோதும் தாயின் குறையை உணரும்படி விட்டுவிடவில்லை.

இவர் ஸேம்பியா சென்றுவிட்டபோது, மிக அதிகமான துஆக்கள் செய்து வழி அனுப்பி வைத்தார்கள். மேலும், கூறுகின்றார்:

சில காலத்திற்கு முன்னர் அன்னாரை சந்திப்பதற்காக நான் சென்றிருந்தேன். அப்போது, திரும்பி வரும்போது அல்லாஹ் உமது பாதுகாவலனாக இருப்பானாக. இனி ஒருவேளை சந்திப்பு நடைபெற முடியாமல் போகலாம் என்று அன்னார் கூறினார்கள். ஐந்து மகன்களையும், ஒரு மகளையும் தனது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். இருவர் அல்லாஹ்வின் அருளினால் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களாக உள்ளனர். (ஒருவர்) நஸீர் நாஸிர் ஸாஹிப் முஅல்லிம் வக்ஃபே ஜதீத் ஆவார்கள். மற்றொருவர், ஸேம்பியா ஜமாஅத்தின் முபல்லிக் ஆவார்கள்.

வெளிநாட்டில் இருந்ததன் காரணமாகவும், செயல் களத்தில் இருந்ததன் காரணமாகவும் இவரால் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் துஆக்களை அன்னாரின் பிள்ளைகளுக்காக நிறைவேற்றி தந்தருள்வானாக.

மூன்றாவது நற்குறிப்பு, பிரிகேடியர் முனவர் அஹ்மத் ரானா ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் ராவல்பிண்டி மாவட்ட ஜமாஅத்தின் பொதுச் செயலாளராக இருந்தார்கள். அன்னாரும் கடந்த நாட்களில் மரணமடைந்துள்ளார்கள்.

إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஒரு ஸஹாபியான அன்னாரின் பாட்டனார் சவ்த்ரி குலாம் அஹ்மத் ஸாஹிப் அட்வகேட் மூலமாக அன்னாருடைய குடும்பத்தில் அஹ்மதிய்யத் தோன்றியது. 1971 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் இராணுவத்தில் அன்னார் சேர்ந்தார்கள். இராணுவ சேவையின் போது ஜமாஅத்துடன் ஆழமான தொடர்பு வைத்திருந்தார்கள். அன்னார் சர்வீஸ் செய்து கொண்டிருந்தபோது தமது பல்வேறு தங்குமிடங்களில் தமது வீட்டை அன்னார் தொழுகை சென்டராக பயன்படுத்திக் கொள்ள கொடுத்து வந்தார்கள். ஜமாஅத்துடன் அர்ப்பணிப்பு மிக்க நேசம் கொள்ளக் கூடிய, ஒரு தீரமிக்க அஹ்மதி (இராணுவ) அதிகாரியாக இருந்தார்கள். ஓய்வுப் பெற்ற பிறகு, எப்போதும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்காக தம்மைத் தாமே அர்ப்பணித்தார்கள். கேன்ட் அமாரத் மற்றும் ராவல்பிண்டி மாவட்டத்தில் அன்னாருக்கு பல்வேறு தொண்டுகள் ஆற்றுவதற்கு நற்பேறு கிடைத்தது. மிகவும் உழைப்புடனும், ஆர்வத்துடனும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வந்தார்கள். மேலும், மிகவும் மென்மை மற்றும் பணிவுடன் தமது தோழர்களுடன் நடந்து வந்தார்கள். மேலும், தமது பொறுப்பாளர்களுக்கு கட்டுப்பட்டு வந்தார்கள். கிலாஃபத்துடன் மிகவும் நன்றியுணர்வு மற்றும் கட்டுப்படுதலுக்கான தொடர்பு இருந்தது. எல்லாத் திட்டங்களுக்கும் லெப்பைக் கூறக்கூடியவராக இருந்தார்கள். ஏழைகளின் மீது அனுதாபம் கொண்டவராக இருந்தார்கள். இன்னல்களுக்கு ஆளானவர்களுக்கு எப்போதும் உதவி செய்வதற்கு தயாராக இருந்தார்கள். அல்லாஹ்வின் அருளினால் அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள். அன்னாரின் வயதான தாயார் ஸலீமா குர்ஷித் ஸாஹிபா அவர்களும், இரண்டு மனைவிமார்களும், ஐந்து பிள்ளைகளும் இருக்கின்றார்கள். பிள்ளைகளில் நான்கு மகள்களும், ஒரு மகனும் அடங்குவர். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

கடைசி நற்குறிப்பு, ஓய்வு பெற்ற குரூப் கேப்டன் அப்துஷ் ஷுகூர் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் இன்றைய நாட்களில் டேலஸ், அமெரிக்காவில் இருந்தார்கள். அங்கு கடந்த நாட்களில் மரணமடைந்துள்ளார்கள்.

إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னாரின் தாய் வழிப் பாட்டனார் குலாம் நபி ஷேக் ஸாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியாக இருந்தார்கள். அன்னாரின் மூலம் மர்ஹூமின் சொந்த கிராமம் நவ் ஷஹ்ராவிலும் அஹ்மதிய்யத்தின் பிரச்சாரம் நடைபெற்றது. தப்லீக் நடைபெற்றது. மேலும் ஜமாஅத்தும் உருவானது. மர்ஹூம் பாகிஸ்தானின் ஏர்ஃபோர்ஸில் முதலில் இன்ஜீனியராகவும் பின்னர் குரூப் கேப்டனாகவும் பணி செய்வதற்கு நற்பேறு பெற்றார்கள். பதினைந்து ஆண்டுகள் வரை ராவல்பிண்டியில் நாயிப் அமீராக தொண்டாற்றி வந்தார்கள். இந்த காலத்தில் அன்னார் ஏராளமான இறைவழிக் கைதிகளின் வழக்குகளை நடத்தி வந்தார்கள். கிலாஃபத்துடன் அன்னாருக்கு ஆழமான தொடர்பு இருந்தது. ஏர்ஃபோர்ஸில் பணி செய்து வந்தபோது, ஜமாஅத்திற்கெதிராக எதிர்ப்பு இருந்து வந்தபோதிலும் அன்னார் மிக தைரியத்துடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடையாளத்தை நிலைநாட்டி வந்தார்கள். ஓய்வு பெற்ற பிறகு, தமது வாழ்க்கையை ஜமாஅத்திற்காக

அர்ப்பணித்துவிட்டார்கள். ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதில் ஓர் உயர்ந்த முன்மாதிரியை நிலைநாட்டக் கூடியவராக இருந்தார்கள். பகலாக இருந்தாலும், இரவாக இருந்தாலும் எப்போது அன்னாரை அமீர் ஜமாஅத் அழைத்தாலும் அல்லது ஜமாஅத் அழைத்தாலும் உடனடியாக ஆஜராகிவிடுவார்கள். ஒருபோதும் எந்த சாக்குப்போக்கும் கூறியதில்லை. நோன்பையும், தொழுகையையும் பேணக்கூடியவராக இருந்தார்கள். ஒவ்வொருவருடனும் அன்பும், நேசமும் கொள்ளக்கூடியவராக இருந்தார்கள். நல்ல தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவராக இருந்தார்கள்.

அன்னாரின் மகள் ஷாஸியா சுஹைல் ஸாஹிபா கூறுகின்றார்: எனது தந்தையார் அதிகமான நேரத்தை ஜமாஅத் பணிகளில் கழித்து வந்தார்கள். எங்கே இருந்தாலும், அவர்களுக்கு பிடித்தமான நேரம் தொழுவது அல்லது ஜமாஅத் பணிகளை செய்வதற்கான நேரமாக இருந்தது. எப்போதும் அல்லாஹ்வின் அருள் மற்றும் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டதற்கான சம்பவங்களை கூறிவந்தார்கள். எப்போதும் பிள்ளைகளை தம்முடன் அமர்த்தி வந்தார்கள். மேலும், அந்த சம்பவங்களை கூறிவந்தார்கள். அல்லாஹ்வுக்கு அஹ்மதிகளுடன் என்ன சிறப்பான தொடர்பு உள்ளது? அல்லாஹ் அஹ்மதிகளின் விவகாரங்களை எவ்வாறு சீர்படுத்துகின்றான்? என்பதைக் கூறிவந்தார்கள். அன்னார் எங்களுக்கு கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு எல்லா முக்கிய விஷயங்களிலும் கடிதம் எழுதுவதற்கு அறிவுறுத்தி வந்தார்கள். எல்லா விஷயத்தையும் எழுதுங்கள் என்று எப்போதும் கூறிவந்தார்கள்.

கூறுகின்றார்: எங்களது தந்தையின் அடையாளம் அல்லாஹ்வின் மீதான முழுமையான நிச்சய உறுதி மற்றும் இறை திருப்திக்கு முன்னால் முழுமையாக சிரம் பணிந்து விடுதல் ஆகும். உங்களிடத்தில் எப்போது என்ன பணம் வந்தாலும் அதிலிருந்து சந்தாவிற்காக கண்டிப்பாக எடுத்து வைக்க வேண்டும் என்று எங்களுக்கு குழந்தைப் பருவம் முதலே கற்றுக் கொடுத்தார்கள். அதன் மூலம் எங்களது வருமானத்திலும் பரக்கத் ஏற்பட்டது. மேலும் தூய்மையும் அதிகரித்து வந்தது.

மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். அன்னாரின் நினைவாக விட்டுச் சென்றவர்களில் மூன்று மகள்களும், ஒரு மகனும் அடங்குவர். அன்னாரின் மகன் டாக்டர் ஆமிர் ஸாஹிப் அமெரிக்காவிலேயே மருத்துவராக இருக்கின்றார். ஜமாஅத்திற்காக அவரும் பணி செய்து வருகின்றார். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் துஆக்களை அன்னாரின் பிள்ளைகளுக்காக நிறைவேற்றுவானாக. (ஆமீன்)

தமிழாக்கம் :
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)**

எப்படிப்பட்டதாக வந்துவிடுகின்றது என்றால், அதில் அவரது புரிதல் மற்றும் அறிவிற்கேற்ப, அவரது இயல்பிற்கேற்றவாறு உரையாடல் நிகழ்ந்துவிடுகின்றது. அதனால் அவருக்கு பயன் கிடைத்துவிடுகின்றது. மனிதன் மீண்டும், மீண்டும் வரவில்லையென்றால் மேலும், அதிக நாட்கள் வரை தங்கவில்லையென்றால் பின்னர், ஒருநேரத்தில் அவரது இயல்பிற்கு பொருத்தமற்ற உரையாடல் நிகழ்ந்து, அதனால் அவருக்கு தப்பெண்ணம் உருவாகி, அவர் நல்லெண்ணத்திற்கான பாதையிலிந்து விலகிச் சென்று விடுவதற்கும், அவர் அழிந்துவிடுவதற்கும் சாத்தியம் உள்ளது.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 462, காதியான் பதிப்பு -2003)

**தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)**

ஒருவகையில் இந்த வசனத்தில் ஒரு பொதுவான நீதிமன்ற உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. அதாவது பருவமடையாதவர்களின் செல்வங்களை பராமரிக்கக் கூடிய துறை இன்றைய நாட்களில், மேற்கத்திய அரசாங்கங்களின் கீழ் இந்தக் கட்டளையின் படி அமல் செய்யப்படுகின்றது. ஆனால், இந்த சிந்தனைக்கான அடித்தளத்தை இன்றிலிருந்து ஆயிரத்தி முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே இஸ்லாம் அமைத்துவிட்டது.

وَاَوْفُوْا بِالْعَهْدِ உங்களது வாக்குறுதிகளை முழுமை செய்யுங்கள். வெளிப்படையில், இந்த வாக்கியம் அனாதைகளைப் பற்றிய குறிப்பில் தொடர்பற்றதாக தெரிகின்றது. ஏனெனில், அனாதைகளுக்கு உடன்டிக்கைகளுடன் எந்த சிறப்பான தொடர்பும் தென்படுவதில்லை. ஆனால் உண்மையில், அப்படியல்ல.

(1) அஹது என்பதற்கு பொறுப்பு என்ற பொருளும் உண்டு. கூறுகின்றார்கள்: فُلَانٌ وَلِيُّ الْعَهْدِ அதாவது, அரசாங்கத்திற்கான பொறுப்பு ஆளுநர் ஆவார். இந்தப் பொருள்களின் அடிப்படையில் அனாதைகள் தொடர்பான உங்களது பொறுப்புகளை நிறைவேற்றுங்கள் என்பது இந்த வாக்கியத்தின் பொருளாக அமையும். அவர்களின் செல்வங்களை நிர்வகிப்பதற்கான அவசியம் இருக்கும் வரை நிர்வகித்து வாருங்கள். அவர்களின் செல்வங்களை அவர்களிடம் ஒப்படைக்கும் நேரம் வந்துவிடும்போது அவர்களின் செல்வங்களை அவர்களிடம் கொடுத்து விடுங்கள்.

இரண்டாவது, அனாதைகளின் செல்வத்தை பாதுகாப்பது என்பது ஒன்றும் உபகாரம் (உங்களின்) பேருபகாரம் அல்ல. மாறாக, இறைவனின் கட்டளை மற்றும் இஸ்லாமிய அமைப்பின் ஓர் அங்கமாகும் என்ற விஷயத்தின் பக்கம் இந்த வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனவே, பேருபகாரமாகக் கருதி அந்தப் பணியை செய்யாதீர்கள். மாறாக, கடமையாகக் கருதி செய்யுங்கள். (2) அனாதை தமது செல்வத்தின் கூடுதல் குறைவு குறித்து எதுவும் கேட்க முடியாது என்பதால் இறைவன் அனாதைகளின் செல்வத்தை தனது வாக்குறுதியின் கீழ் இணைத்துக் கொண்டுவிட்டான். ஏனெனில், நாம் அனாதையின் செல்வத்தை விழுங்கிவிட்டால் யாரும் நம்மை கேட்க முடியாது என்று ஒருவர் கருதி அனாதையின் செல்வத்தை விழுங்கிவிடக் கூடாது என்பதற்காக இறைவன் அவ்வாறு செய்துள்ளான்.

எனவே தான், ஒருவர் அவ்வாறு செய்தால், நாம் கேட்போம்; இது எமது வாக்குறுதி ஆகும் என்று இறைவன் கூறியுள்ளான்.

(3) அனாதைகளைக் குறிப்பிட்டு விட்டு, அனாதைகள் இல்லையென்றாலும், அனாதைகளுக்கு ஒப்பான மக்களைக் குறித்தும் இத்துடன் இணைத்து கூறியுள்ளான். உதாரணமாக, பலம் வாய்ந்த சமுதாயங்களின் பாதுகாப்பின் கீழ் தங்களைத் தாங்களே ஒப்படைத்து விட்ட பலவீனமான சமுதாயங்கள் இருக்கின்றன.

எனவே, அனாதைகளின் குறிப்புடன் அவர்களின் உரிமைகளின் பக்கமும் கவனமூட்டியுள்ளான். அதாவது, சில சமுதாயங்கள் அனாதைகளின் அந்தஸ்தில் இருக்கின்றன. மேலும், அவர்களின் உரிமைகள் உங்களது கட்டுப்பாட்டில் வந்துவிடுகின்றன. நிச்சயமாக இது உங்களின் கடமை ஆகும். அதாவது நீங்கள் தற்போது அவர்களின் உரிமைகளை கண்காணித்து வாருங்கள். ஆனால், நிரந்தரமாக அவர்களின் மீது ஆதிக்கம் செலுத்தாதீர்கள். மாறாக, அவர்களுக்கு தகுதி வந்துவிடும்போது அவர்களிடம் அவர்களின் செல்வங்களை ஒப்படைத்து விடுங்கள். உலகம் இந்தக் கட்டளையின் மீது அமல் செய்தால் பின்னர் இன்று உருவாகி வரும் இனவெறுப்புகள் ஒரு நொடியில் நீங்கி விடும். சில நேரம் ஒரு வலிமையான சமுதாயம் பலவீனமான சமுதாயத்தின் உரிமைகளை பாதுகாப்பதற்காக அவர்களின் பராமரிப்புப் பணியை தனது பொறுப்பில் எடுத்துக் கொள்ளும் நிர்பந்தத்திற்கு ஆளாகி விடுகின்றது என்பதில் எந்த ஐயமுமில்லை. ஆனால், தனக்கு கீழ் உள்ள சமுதாயத்திடம் ஆற்றல் உருவாகி விடும் போது உடனடியாக அவர்களின் செல்வங்களில் அவர்களுக்கு அதிகாரம் வழங்கிவிட வேண்டும். மேலும், அந்த சமுதாயம் நிர்வகிக்கும் தகுதியைப் பெற்றுவிட்ட பிறகு அதன் நாட்டிலும், செல்வத்திலும் ஆதிக்கம் செலுத்தக் கூடாது. இது (பலம் படைத்த) அந்த சமுதாயத்தின் கடமையாக இருக்க வேண்டும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 332, காதியான் பதிப்பு 2010)

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

# ஜுமுஆ பேருரை

**மஜ்லிஸே ஷூராவின் முக்கியத்துவம் மற்றும் அதன் உறுப்பினர்களின் பொறுப்புகளைக் குறித்த ஆழிய ஞானம் நிறைந்த பேருரை**

**மஜ்லிஸே ஷூரா என்பது ஆலோசனை வழங்கக் கூடிய சபை ஆகும். அது தீர்ப்பு வழங்கக் கூடியது அல்ல.**

**ஆலோசனை கொடுக்கக் கூடியவர்கள் எப்போதும் இதனை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது அவர்களின் ஆலோசனைகள் நல்லெண்ணம் மற்றும் இறையச்சத்தின் உயர் தரத்திற்கு ஏற்ப அமைந்திருக்க வேண்டும்**

**உங்களது செயல் முன்மாதிரி, மக்களிடத்தில் நேசம் மிகு தொடர்பு, அவர்களைக் குறித்த வேதனையை உள்ளத்தில் கொள்வது, அவர்களுக்காகவும், தமக்காகவும் துஆ செய்வது, காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுதலின் தரத்தை உயர்த்துவது போன்றவை ஒவ்வொரு பொறுப்பாளர் மற்றும் மஜ்லிஸே ஷூராவின் ஒவ்வொரு உறுப்பினருடைய சிறப்பான தனித்தன்மையாக ஆகிவிட்டால் பின்னர் அந்நிலையில்தான் ஒட்டுமொத்த ரீதியில் ஜமாஅத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றம் உருவாகுவதை நம்மால் காண முடியும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 மே 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **12ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

சென்ற இதழின் தொடர்ச்சி...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் சிறப்பான கருணையினால் தமது சமுதாயத்தின் உறுப்பினர்களுக்கு மிகவும் மென்மையான உள்ளம் படைத்தவராக இருந்தார்கள் என்பது இந்த வசனத்தில் எங்கு உண்மைப்படுத்தப்பட்டுள்ளதோ அங்கு, இந்த விஷயத்தின் பக்கமும் அல்லாஹ் நமக்கு கவனமூட்டியுள்ளான்; மேலும் வழிகாட்டியுள்ளான். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணியை முன்னெடுத்துச் செல்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதோ, மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் தோன்றக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தியின் வருகையின் நோக்கத்தை முழுமை செய்கின்ற பணி எவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்கள் அன்பு, நேசம் மற்றும் மென்மையுடன் பணி செய்ய வேண்டும் என்ற பொறுப்பு அவர்களுக்கும் உள்ளது.

நீங்கள் மென்மை காட்டவில்லையென்றால், மேலும் கடின உள்ளத்தை வெளிப்படுத்தினால், கோபத்திற்கு ஆளாகக் கூடியவர் என்றால், பின்னர் இந்த மக்கள் விலகிவிடுவர் என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே மன்னிப்பதற்கும், பாவமன்னிப்பிற்கான துஆ கேட்பதற்கும் அல்லாஹ் கட்டளை வழங்கியுள்ளான். மேலும், அத்துடன் ஆலோசனை கேட்பதற்கும் கட்டளை வழங்கியுள்ளான்.

எனவே இந்த விதிமுறையின் அடிப்படையிலும், இந்த போதனையின் கீழும் மஜாலிஸே ஷூரா (ஆலோசனை சபைகள்) நடத்தப்படுகின்றன. ஆயினும், பெயரிலிருந்து வெளிப்படுவதைப் போன்று இது ஆலோசனை வழங்கக் கூடிய சபைதான். தீர்ப்பு வழங்கக் கூடியது அல்ல. எனவே தான், ஆலோசனைக்குப் பிறகு நீர் என்ன தீர்மானம் எடுப்பீரோ அதில் அல்லாஹ்வின் மீது நிச்சய உறுதி கொண்டவாறு அமல் செய்வீராக என்று அல்லாஹ் கூறியுள்ளான். அல்லாஹ்வின் மீது நிச்சய உறுதி இருக்கும்போது பின்னர் அல்லாஹ் அதன் விளைவுகளிலும் எண்ணற்ற அருட்களை வெளிப்படச் செய்துவிடுவான்.

நிச்சய உறுதிக்கான உயர்தரமான உதாரணம் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நமக்கு தென்படுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து ஏராளமான விவகாரங்களில் நேரடியான வழிகாட்டல் கிடைத்துக் கொண்டிருந்தது. ஆயினும், குறிப்பாக எந்த விவகாரத்தில் அல்லாஹ்வினுடைய எந்த ஒரு தெளிவான கட்டளையும் கிடைக்காமல் இருந்ததோ அந்த விவகாரத்தில் அன்னார் (ஸல்) நிச்சயமாக ஆலோசனைப் பெற்று வந்தார்கள். **ஜமாஅத்தின் உறுப்பினர்களுடன் ஜமாஅத் பொறுப்பாளர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், நாம் பரஸ்பர ஆலோசனையுடன் பணி செய்ய வேண்டும் என்பதையும் நமக்குக் கூறுவதற்காக அன்னாரின் இந்த செயலும், அல்லாஹ்வின் இந்தக் கட்டளையும் அமைந்துள்ளது.**

அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு கிலாஃபத் எனும் அருட்கொடையை அல்லாஹ் வழங்கியிருப்பது அல்லாஹ்வின் கருணையாகும். எனவேதான் காலத்தின் கலீஃபா, அல்லாஹ்வின் கட்டளை மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்திற்கேற்ப உலகில் பரவியுள்ள ஜமாஅத்துகளிடம் அங்குள்ள சூழல்களுக்கேற்ப ஆலோசனை பெறுகின்றார்.

அல்லாஹ் விரும்பியிருந்தால் ஒவ்வொரு விஷயத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கியிருப்பான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால், சில விஷயங்களில் ஆலோசனை செய்வதற்கு கட்டளை வழங்கிவிட்டு, சில விஷயங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை பெறுவது என்பது உண்மையில் சரியான பாதையில் நம்மை வழிநடத்துவதற்காகவும், ஆலோசனையுடன் பணி செய்வதன் பக்கம் வழிகாட்டுவதற்காகவும் ஆகும். மேலும், சமுதாயத்தில் ஒற்றுமையை உருவாக்குவதற்காக ஆகும். இது தொடர்பாக, ஒரு ஹதீஸில் இதன் விளக்கம் இருக்கின்றது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

شَاوِرْهُمْ فِي الْأَمْرِ

என்ற வசனம் இறங்கியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வும் அவனது தூதரும் இதற்கு விதிவிலக்கானவர்கள் ஆவர். ஆனால், அல்லாஹ் இதனை எனது சமுதாயத்திற்கு கருணையின் காரணியாக ஆக்கியுள்ளான். எனவே அவர்களில் எவர் ஆலோசனை செய்வாரோ அவர் நேர்வழியிலிருந்து இழப்பிற்குரியவராக இருக்க மாட்டார். மேலும், எவர் ஆலோசனை செய்வதில்லையோ அவரால் இழிவிலிருந்து தப்பிக்க முடியாது. (அல்ஜாமிஃ லிஷஅபுல் ஈமான், தொகுதி 10, பக்கம் 41- ஹதீஸ் 7136)

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ இந்த ஆலோசனை செய்வதிலிருந்து விதிவிலக்கு பெற்றவர்களாக இருந்தார்கள். எனினும், அவ்வாறிருந்தபோதிலும் சமுதாயத்திற்கு முன்னால் முன்னுதாரணத்தை தாம் நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக அன்னார் (ஸல்) ஆலோசனை செய்தார்கள். அதன் மூலம் சமுதாயம் அல்லாஹ்வின் கருணையிலிருந்து பங்கு பெற்று வரவேண்டும் என்பதற்காகவும், எப்போதும் நேர்வழியின் பாதைகளில் சென்று கொண்டிருக்க வேண்டும், மேலும் இழிவிலிருந்து தப்பித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகவும் அன்னார் (ஸல்) அவ்வாறு செய்து வந்தார்கள்.

நம்மிடத்தில் ஆலோசனைக்கான அமைப்பு செயல்பாட்டில் உள்ளது. இது அல்லாஹ்வின் நம் மீதான சிறப்பான கருணையாகும். எனவே அவன் நமக்கு நேர்வழிக்கான ஏற்பாட்டை செய்திருக்கின்றான் என்று பொதுவாக ஒவ்வொரு அஹ்மதியும், குறிப்பாக ஷூராவின் ஒவ்வோர் உறுப்பினரும் அதற்கு கண்ணியமளித்தவாறு அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தக்கூடியவராக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த சந்தர்ப்பங்களில் ஆலோசனை பெற்றார்கள்? மேலும் ஆலோசனை செய்வதற்கான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிமுறை என்னவாக இருந்தது? என்பது தொடர்பாக வரலாற்றிலிருந்து நமக்கு தெரிய வருகின்றதையெல்லாம் நான் (இன்று) எடுத்துரைப்பேன். அதே வழிமுறையையே குலஃபாயே ராஷிதீன்கள் (நேர் வழி பெற்ற

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 22 June 2023 Issue No. 25

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கலீஃபாக்கள்) மேற்கொண்டு வந்தார்கள். மேலும், பின்னர் இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் அதன்படி அமல் செய்தார்கள்.

பொதுவாக, ஆலோசனை பெறுவதற்கு மூன்று வழிமுறைகள் நமக்கு தென்படுகின்றன. முதலாவது வழிமுறை என்னவாக இருந்ததென்றால், ஒரு விவகாரம் ஆலோசனை செய்யப்படுவதற்கு தகுதியானதாக இருக்கும்போது மக்கள் ஒன்று கூடுங்கள் என்று ஒரு நபர் அறிவிப்பு செய்வார். மக்களும் ஒன்று கூடிவிடுவார்கள். பின்னர் இந்த ஆலோசனைகளுக்குப் பிறகு பெறப்பட்ட கருத்துகள் அல்லது ஆலோசனையின் மீது எமது தீர்மானம் இதுவாகும்; இவ்வாறு அதன்படி அமல் செய்யப்படும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லது கலீஃபாக்கள் முடிவெடுத்துவிடுவார்கள். அக்காலத்தில், தலைமைத்துவ அமைப்பு இருந்தது. எனவே பொதுவாக, கோத்திரங்களின் ஏராளமான மக்கள் ஒன்றுகூடி வந்தனர். எனினும், தலைவர் அல்லது அமீர் மட்டுமே ஆலோசனை வழங்கி வந்தார். அவர்களின் ஒரு பிரதிநிதி இருந்து வந்தார். மேலும், நமது பிரதிநிதித்துவத்தில் நமது தலைவர் அல்லது அமீர் ஆலோசனை வழங்குகின்றார் என்பதில் மக்கள் மகிழ்ச்சியுடன் திருப்தி அடைந்து வந்தார்கள். இன்னும் கூறப்போனால், அந்தக் காலத்தில் இருந்த மரபுகளுக்கு எதிராக ஒரு நபர் உற்சாக மிகுதியால் தனது கருத்தைக் கூறுவதற்கு முயற்சி செய்தாலும் நீங்கள் உங்களது தலைவர் அல்லது அமீரிடம் கூறுங்கள்; பின்னர் அவர் வந்து தமது கருத்தை கூறட்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிவந்தார்கள்.

இரண்டாவது வழிமுறை என்னவாக இருந்ததென்றால், எங்கு இரண்டு நபர்களும் ஒருசேர ஒன்றுகூட வேண்டாம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருதினார்களோ அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனித்தனியாக ஆலோசனை பெற்று வந்தார்கள். முதலில் ஒருவரை அழைத்து ஆலோசனை பெற்று வந்தார்கள். பின்னர் இரண்டாவது நபரை அழைத்து ஆலோசனை செய்து வந்தார்கள். (குத்பாதே ஷூரா, தொகுதி 1, பக்கம் 6-7, மஜ்லிஸே முஷாவிரத் - 1922)

எவ்வாறு இருப்பினும், ஆலோசனை பெறுவதற்கு இந்த மூன்று வழிமுறைகளே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிமுறையாக இருந்தன. மேலும், குலஃபாயே ராஷித்களும் இதற்கேற்பவே ஆலோசனைப் பெற்று வந்தர்கள். ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது போன்று, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் மற்றும் அவனது தூதர் இந்த ஆலோசனைகளைப் பெறுவதிலிருந்து விதிவிலக்கானவர்கள் என்றாலும், அதன் பிறகும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆலோசனை பெற்றார்கள் என்பது நமக்கு வரலாற்றிலிருந்து தெரிய வருகின்றது.

இன்னும்கூறப்போனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏராளமான ஸஹாபிகளிடமிருந்து ஆலோசனைப் பெற்று வந்தார்கள். ஆக, ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அதிகமாக தமது தோழர்களிடத்தில் ஆலோசனைப் பெறக்கூடியவர் எவரையும் கண்டதில்லை. (சுனன் திர்மிதி, அப்வாபுல் ஜிஹாது, ஹதீஸ் எண்: 1714)

இவை அனைத்தும் இதன் காரணமாகவே அமைந்திருந்தது. அதாவது, நான் கூறியதுபோன்று அல்லாஹ்வின் நேரடியான வழிகாட்டல்களைப் பெற்று வந்த அல்லாஹ்வின் நபி ஆலோசனை பெறுகின்றார் என்றால் பின்னர் நீங்கள் ஆலோசனையின் முக்கியத்துவத்தை புரிவதற்கு முயற்சி செய்ய வேண்டும்!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை செய்தது தொடர்பான ஒரு சம்பவத்தை எடுத்துரைக்கின்றேன். ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை ஏமன் நாட்டிற்கு அனுப்பி வைக்க தீர்மானித்தபோது, அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏராளமான ஸஹாபிகளிடம் ஆலோசனை செய்தார்கள். அந்த ஸஹாபிகளில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) மற்றும் ஏராளமான ஸஹாபிகளும் அடங்குவர். அப்போது, ஹுஸுர் (ஸல்) அவர்களே! தாங்கள் ஒருவேளை எங்களிடம் ஆலோசனை கேட்காமல் இருந்திருந்தாலும் நாங்கள் எதுவும் கூறியிருக்க மாட்டோம் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு, எந்த விவகாரங்கள் தொடர்பாக எனக்கு வஹீ இறங்குவதில்லையோ அந்த விவகாரங்களில் நானும் உங்களைப் போன்றே இருக்கின்றேன் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள்.

ஹஸ்ரத் மஆஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு ஆலோசனை வழங்குங்கள் என்ற ஹுஸுர் (ஸல்) அவர்களின் கூற்றிற்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை கேட்கும் போது, ஒவ்வொரு நபரும் தத்தமது கருத்தைக் கூறி வந்தனர். மேலும், அதன் பிறகு மஆஸே! நீர் கூறும்! உமது கருத்து என்ன? என்று ஹுஸுர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்தே எனது கருத்து என்று நான் கூறினேன். (அல்முஃஜமுல் கபீர் லில்திப்ாரனி, தொகுதி 20, பக்கம் 67, ஹதீஸ் எண்: 24)

ஆக, அன்னாரிடமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனைக் கேட்டார்கள். எனவே, எங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த வெளிப்பாடு அன்னாரது எளிமை, பணிவு மற்றும் ஆலோசனையின் முக்கியத்தவத்தை வெளிப்படுத்துகின்றதோ அங்கு நாம் எந்த அளவிற்கு ஆலோசனைக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும் என்ற அழகிய முன்மாதிரியும் இதில் நமக்கு உள்ளது.

மேலும், ஸஹாபிகளின் முன்மாதிரிகள் நமக்கு இதனைக் கூறுகின்றன. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க ஸஹாபிகள் ஆலோசனை வழங்கியபோது, தமது ஆற்றல்கள் மற்றும் அனுபவத்திற்கேற்ப இறையச்சத்தின் வழிநடந்தவாறு ஆலோசனை வழங்கி வந்தார்கள்.

அடுத்து, மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த பிறகு, மக்கத்து காஃபிர்கள் முஸ்லிம்களின் அமைதியையும், பாதுகாப்பையும் அழிப்பதற்கு முயற்சி செய்தனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை ஒடுக்குவதற்காக ஸஹாபிகளிடம் ஆலோசனை செய்தார்கள்.

இதன் தொடர்ச்சி இதழில்...

தமிழாக்கம் :
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad